Registered as a news paper.

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

WESTERN UNION® பணப் பரிமாற்றம்
மூலம் உலகின் எப்பாகத்தில்
இருந்தும் பணத்தை விரைவாக
பெற்றுக் கொள்ள நல்லூரில்...
சந்தியா மல்ரி கோட்யாட்
531, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 04 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.அவ்வல் 30 (19.07.2004) திங்கட்கிழமை இதழ் :290

# புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள்;

# மிக விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும்!

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் இந்திய நிதியமைச்சர் தெரிவிப்பு!

(புதுடெல்கி)

**விடுதலைப் புலிகளுக்கும் – இலங்கை அரசுக்கும் இடையிலான பேச்சுக்கள் மீளவும் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பதில் இந்தியா மிகுந்த அக்கறையுடன் இருப்பதாக, இந்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்தார்.**

**மூன்று நாள் விஜயமாக நேற்று முன்தினம் இந்தியா சென்றுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இந்திய நிதியமைச்சர் ப.சிதம்பரத்தை சந்தித்துக் கலந்துரையாடியபோதே, அவர் பிரதமரிடம் இவ்வாறு தெரிவித்தார்.**

**இந்தச் சந்திப்பில் இந்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் மேலும் தெரிவித்ததாவது –**

இலங்கை அரசாங்கத்திற்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் இடையில் தடைப்பட்டமை இந்தியாவிற்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது. எனவே - இரு பகுதியினருக்குமிடையே விரைவில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டுமென இந்தியா விரும்புகிறது.

அத்துடன் பிரதமர் ராஜபக்ஷவிற்கும், நிதியமைச்சர் சிதம்பரத்திற்கும் இடையில் நடந்த சந்திப்பில் இரு நாடுகளுக்குமிடையில் பரந்தளவிலான உறவுகள் மற்றும் இலங்கையில் விவசாயத்திட்டங்களை மேம்படுத்துதல், வீதி அபிவிருத்தி குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் நடத்திய சந்திப்புக் குறித்து சிதம்பரம் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்ததாவது -

இரு தரப்புப் பேச்சுவார்த்தையில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் குறித்து அடையாளம் கண்டோம். இவற்றுக்கான தீர்வுகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும்.

அத்துடன் - சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மற்றும் பிற விடயங்கள் குறித்தும் - இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

எவ்வாறெனினும் இவற்றுக்கான இறுதி முடிவு பிரதமர் மன்மோகன் சிங்குடன் நடத்தப்படவுள்ள கலந்துரையாடலின் பின்பே எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் - இலங்கை சார்பாக வர்த்தக நுகர்வோர் துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளே, காணிஅமைச்சர் அநுர திஸநாயக்க பிரதமரின் செயலாளர் லலித் வீரதுங்க, ஆலோசகர் சுனிமல் பெர்னான்டோ ஆகியோரும் கலந்து கொண்டனர்.



## கொழும்புத் துறைமுகப் பாதுகாப்பு; அமெரிக்காவுடன் கலந்துரையாடல்!

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தின் பாதுகாப்பை மேம்படுத்தும் பொருட்டு, அமெரிக்காவும் - இலங்கையும் இணைந்து செயற்படவுள்ளன.

இதுதொடர்பாக இரண்டு நாடுகளும் வெகுவிரைவில் கலந்துரையாடவுள்ளன. உலகம் முழுவதும் கதிரியக்க இயந்திரங்கள் சட்டவிரோதமாகக் கொண்டு செல்லப்படுவதைத் தடுக்கும் பொருட்டே, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக, அமெரிக்க எரிசக்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனை முன்னிட்டு - அமெரிக்க எரிசக்தித் திணைக்களத்தின் மெகா பொட்ஸ் பிரதிநிதிகள் விரைவில் கொழும்புக்கு வருகைதந்து- இலங்கை அதிகாரிகளோடு பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கிய துறைமுகங்களைப்பயன்படுத்தி கப்பல்கள் மூலமாக அணு உற்பத்திகள், கதிரியக்க உபகரணங்கள் ஆகியவற்றை பயங்கரவாத இயக்கங்கள் சட்டவிரோதமாகக் கடத்துவதைத் தடுக்கவே இந்த் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 25 அரசியல் கட்சிகளின் அங்கீகாரத்தை பறிப்பது குறித்து தேர்தல் திணைக்களம் ஆராய்வு!

(கொழும்பு)

பதிவு செய்யப்பட்ட - சுமார் 25 அரசியற்கட்சிகளின் அங்கீகாரத்தை ரத்துச் செய்வது குறித்து தேர்தல் திணைக்களம் ஆராய்ந்து வருவதாகத் தேர்தல் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டுக்கும் மேற்பட்ட தேர்தல்களில் பங்கேற்காத சுமார் 25 அரசியற் கட்சிகளின் அங்கீகாரமே, இவ்வாறு ரத்துச்செய்யப் படவுள்ளன.

இவற்றுள் இலங்கை'யின் பிரதான கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் கட்சியான விடு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணாவுக்கு உதவுவதாக டக்ளஸ் தேவானந்தா அறிவித்ததால் கொழும்புக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவுக்கு, தாம் ஆதரவு வழங்குவதாக ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் அமைசசருமான டக்ளஸ் தேவானந்தா பகிரங்கமாக அறிவித்ததை அடுத்து,

### புலனாய்வுத்துறை எச்சரிக்கை

கொழும்பு நகரத்தின் பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக - இராணுவப் புலனாய்வுத்துறை அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இவ்வாறு கருணாவுக்கு பகிரங்க ஆதரவு தெரிவித்திருப்பதால் - கொழும்பு நகரின் பல்வேறு பகுதிகளிலும் குண்டுவெடிப்புத் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்று, இந்தப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகள் குறித்து ஐ.தே.கட்சியினுடைய நகர்வுகளை தீர்மானிக்கும் அதிகாரம் பீரிசுக்கு!

(கொழும்பு)

அரசிற்கும் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகள் தொடர்பான, அடுத்தகட்ட நகர்வுகள் குறித்த முடிவுகளை எடுப்பதற்கான அதிகாரத்தை பேராசிரியர் ஜீ.எல்.பீரிசுக்கு ஐக்கிய தேசியக் கட்சி வழங்கியுள் ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகளில் - நீண்டகாலம் அதிக அக்கறையுடன் செயற்பட்டவர் என்ற அடிப்படையிலேயே சமாதான முயற்சிகள் குறித்த - கட்சியின் அடுத்த கட்ட நகர்வுகளைத் தீர்மானிக்கும் அதிகாரம் இவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை -

தமது கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளபோதும், இந்தச் சந்திப்புக்கான அழைப்பு தமக்குக் கிடைக்கவில்லை என்றும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள் ளது.

(01)

## அரசாங்கத் தூதுக்குழுவில் எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளும்!

### அரசு கொள்கையளவில் இணக்கம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான எதிர்காலப் பேச்சுவார்த்தைகளின்போது- அரசாங்கத் தூதுக்குழுவில் எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளையும் பங்கேற்கவைப்பது என, ஐக்கிய மக்கள் சுதந்திர முனணி அரசாங்கம், கொள்கையளவில் இணக்கம் கண்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் அடிப்படையிலேயே - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதான முயற்சிகள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட ஏனைய கட்சித் தலைவர்களைச் சந்திக்க முடிவெடுத்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே சமாதான பேச்சுவார்த்தைகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

# கரவெட்டி கோட்டப் பாடசாலைகளின் தமிழ் மொழித்தின போட்டி முடிவுகள்

கரவெட்டிக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட தமிழ்மொழித் தினப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தப்போட்டியில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் வலய மட்டப் போட்டிக்குத் தோற்றவுள்ளனர்.

முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு :

### பிரிவு - I

#### வாசிப்பு

முதலாம் இடம் - த.கோகுலன் (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்).

இரண்டாம் இடம் - சி.கௌசிகா (ஞானசாரியார் கல்லூரி).

மூன்றாம் இடம் - ச.இந்துஜா (துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்).

#### ஆக்கத்திறன் வெளிப்பாடு கதைகூறல்

முதலாம் இடம் - கி.பிரணவன் (நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை).

இரண்டாம் இடம் - சி.நிருபகாந் (கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம்).

மூன்றாம் இடம் - க.வர்ணிகா (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்).

#### ஆக்கம் எழுத்து

முதலாம் இடம் - வி.பூர்வஜா (கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம்).

இரண்டாம் இடம் - க.துவாரகா (வதிரி வடக்கு மெ.மி.த.க பாடசாலை).

மூன்றாம் இடம் - க.லக்ஷனா (துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்).

#### பேச்சு

முதலாம் இடம் - ஸ்ரீ.சாகித்யா (நெல்லியடி மெ.மி.த.க. பாடாசலை).

இரண்டாம் இடம் - சு.பாலகுமார் (உடுப்பிட்டி அ.மி. கல்லூரி).

மூன்றாம் இடம் - ச.அபிநயா (துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்).

#### பாவோதல்

முதலாம் இடம் - து.மாலோகன் (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்).

இரண்டாம் இடம் - நி.சாமந்தி (நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை).

மூன்றாம் இடம் - கி.விதுஜா ஜெனி (கட்டைவேலி யாக்கரு வித்தியாலயம்).

#### இசையும் அசைவும்

முதலாம் இடம் - த.அன்சுகா (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலம்).

இரண்டாம் இடம் - லோ.மதுஷன் (கரணவாய் தாமோதர வித்தியாலயம்).

மூன்றாம் இடம் - ப.பிரவீணா (நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை).

#### நடனம்

முதலாம் இடம் - கு.வைதேகி (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்).

இரண்டாம் இடம் - ச.துஷாரா (நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை).

மூன்றாம் இடம் - வி.நனுஷா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

சி.நதுர்ஜா (கரணவாய் தாமோதர வித்தியாலயம்).

### பிரிவு - II

#### வாசிப்பு

முதலாம் இடம் - ஜெ.தமிழ்நிலா (கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்).

இரண்டாம் இடம் - நே.ஆதித்தியா (நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்).

மூன்றாம் இடம் - ஞா.விஜிதா (கட்டைவேலி யாக்கரு விநாயகர் வித்தியாலயம்).

#### கட்டுரை வரைதல், கடிதம் எழுதுதல்

முதலாம் இடம் - பா.சண்முகப் பிரியா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

இரண்டாம் இடம் - ஈ.இரஞ்சினி (விக்னேஸ்வரா கல்லூரி).

மூன்றாம் இடம் - மு.ஜதுநந்தா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

#### பேச்சு

முதலாம் இடம் - பு.சுபித்தா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

இரண்டாம் இடம் - செ.ஹெமதட்சனி (விக்னேஸ்வரா கல்லூரி).

மூன்றாம் இடம் - க.நிரோசன் (நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்).

#### பாவோதல்

முதலாம் இடம் - மு.ஜமிலா (வல்வெட்டி இ.த.க.பாடசாலை).

இரண்டாம் இடம் - வெ.பிரார்த்தனா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

மூன்றாம் இடம் - சி.மேரி ஜெனிற்றா (வதிரி திருஇருதயக் கல்லூரி).(13)

(நாளை தொடரும்...)



தாயகத்தின் 4 ஆம் வருட ஆரம்ப விழாவில் யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் இணைப்பாளர் சுதாஸ் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும், தாயக மாணவர்கள் தமிழ்த்தாய் வாழ்த்தில் பங்குகொள்வதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படம் - தீபன்)

# புனர்வாழ்வு அபிவிருத்தி அமைப்பு மட்டுவிலில் அங்குரார்ப்பணம்!

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு, அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு மட்டுவிலில் புனர்வாழ்வு அபிவிருத்தி அமைப்பு ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

இந்தப் புதிய அமைப்பின் அங்குரார்ப்பண நிகழ்வு - கடந்த சனியன்று மட்டுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெற்றது.

இந்த அமைப்பின் தலைவராக வெ.எட்வேட்டும், உப தலைவராக ஆசிரியர் அருந்தவராசாவும், செயலாளராக, க.சிவராசாவும், உப செயலாளராக ந.சிவபாதமும், பொருளாளராக ஆசிரியை பவானியும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுடன் இணைப்பாளர்களாக 11 நபர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

## தமிழ்மொழித் தின விழா

யாழ்.இந்துக் கல்லூரியின் தமிழ்ச் சங்கம் நடத்தும் தமிழ் மொழித்தின விழா இன்று காலை குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.


## சிறு விளம்பரம்

### ஐரோப்பிய நாடுகளுக்கான VISA

CANADA, UK, SWITZERLAND, GERMANY போன்ற ஐரோப்பிய நாடுகளுக்கு VISA விற்கு விண்ணப்பம் செய்யும்போது, முறையான வழி நடத்தலைத் தெரிவுசெய்ய வேண்டும். உங்களுடைய ஆவணங்களைத் தகுந்த முறையில் சரி பார்த்து, தகுந்த ஆலோசனைகளையும் தருகின்றோம். விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்வதற்கும், ஆலோசனைகளுக்கும் தொடர்பு கொண்டு நேரத்தை ஒதுக்கவும். VISA நிராகரிக்கப்பட்டவர்களும் தொடர்புகொள்ளலாம். T.P No : 2504665. திருமதி R. செல்வராஜா, (789)

**நாகம்ஸ்** சுன்னாகம்



சில தினங்களுக்கு மட்டும்

அர்ஜுன், அபிராமி, பிரகாஷ்ராஜ் நடித்த

வானவில்

20 ஆம் திகதி முதல் குத்து

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

**ராஜா** யாழ்ப்பாணம்.

சரத்குமார், சாக்ஷி, விஜயகுமார், சுஜாதா, வடிவேலு நடித்த



காட்சிநேரம்:-10.30, 2.306.30, 9.3 (பு.நே)

மானஸ்தன்

(சி-2725)

**நிரஞ்சனாஸ்** சங்கானை

அர்ஜுன், ரஞ்சிதா, அனிதா நடித்த

ஜெய்ஹிந்த்

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00 (பு.நே.)

THE GURU

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45(பு.நே)

(சி-2723)

## பிரத்தியேக கணனி வகுப்புக்கள்

கொழும்பிலிருந்து வருகை தந்திருக்கும் அனுபவம் வாய்ந்த கணனி விரிவுரையாளர்களினால் கணனி கற்கை நெறிகள் (Diploma) விரிவான தமிழ் விளக்கங்களுடன் மிகக்குறைந்த ,கட்டணத்தில் வீடுகளுக்கு வருகைதந்து கற்பிக்கப்படுகின்றன.

தொடர்பு:- பாலா மாஸ்ரர்

T.P No - 0777 -'241823 (791)

COMMERCE STUDENTS' UNION UNIVERSITY OF JAFFNA

## வரலாறு காணாத மலிவு விற்பனை

கொழும்பு ஜெயா புக் சென்ரரின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது தடவையாக வரலாறு காணாத மலிவு விற்பனை நடைபெறவுள்ளது.

**காலம்** : 2004 ஜூலை 19 முதல் 29 வரை

**நேரம்** : தினமும் காலை 9.00 மணிமுதல் 6.00 மணிவரை (புதிய நேரம்)

**இடம்** : யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்.

- சகலருக்கும் இலங்கை நூல்களுக்கு 10% கழிவு வழங்கப்படும்.
- பிறநாட்டு வெளியீடுகளுக்கு 15% கழிவு வழங்கப்படும்.
- மொத்தமாகக் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் இலங்கை வெளியீடுகள் தவிர பிறநாட்டு வெளியீடுகளை (ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது 10 பிரதிகள்) கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவாக 20% வழங்கப்படும்.

பாடசாலைகள், பல்கலைக்கழகம், தொழில்நுட்ப கல்லூரிகள், கல்வியியல் கல்லூரி, பொதுநிறுவனங்கள், பிரதேசசபை நூலகங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகிய நிறுவனங்களுக்கு கடன் அடிப்படையில் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்குரிய ஒழுங்குகள் செய்யப்படும்.

தொடர்புகளுக்கு: வணிக மாணவர் மன்றம், யாழ்.பல்கலைக்கழகம்.

(சி-2764)

## பணிநிலை வேண்டுகை

யாழ்.மாவட்டத்தின் சந்தைகளுக்கான வரி அறவீட்டாளர் பணிநிலைக்கு ஆண்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. எனவே, சந்தைகளில் பணிபுரிய விரும்புவோர் தன்வரலாறு அடங்கிய விளக்கங்களுடன் 2004 - 07 - 22 ஆம் நாள் நடைபெறவுள்ள நேர்முகத் தேர்வுக்கு வருகை தருமாறு வேண்டுகிறோம்.

**பணிநிலை - வரி அறவீட்டாளர்**

தகைமைகள் -
1. தமிழ், கணிதம் உட்பட க.பொ.த.சாதாரண தரத்தில் தேறியிருத்தல் வேண்டும்.
2. அகவை 18 - 35 குள் இருத்தல் வேண்டும்.

**நேர்முகத் தேர்வு நடைபெறும்**

நாள் - 2004-07-22

நேரம் - காலை 10.00 மணி

இடம் - 27, ஆடியபாதம் வீதி, கொக்குவில்.

குறிப்பு - நேர்முகத்தேர்வுக்கு ஆவணங்களுடன் வருகைதரல் வேண்டும்.
1. கல்விச் சான்றிதழ்,
2. தே.அ.அட்டை
3. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
4. மேலதிக தகைமைச் சான்றுகள்

ஆளுநகை,
சந்தைப்பகுதி, யாழ்.மாவட்டம்

(785)

யாழ்ப்பாணம

# புரிந்துணர்வு உடன்பாட்டை சட்டரீதியற்றதாக அறிவிக்கக்கோரி உயர் நீதிமன்றில் வழக்கு!

## தாக்கல் செய்வதற்கு பேராசிரியர் திட்டம்

கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தமானது, தற்போதைய அரசியலமைப்பு விதிகளை மீறுவதாக உள்ளது.

எனவே, இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அதிகாரமற்றதாக்குமாறு கோரி, நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்போவதாக இங்கிலாந்தின் கண்டபரி பல்கலைக்கழகத்தில் நீதித்துறை பேராசிரியராக பணியாற்றும் பேராசிரியர் தினேஸ் கேசர குணசேகர கூறியுள்ளார்.

வடக்கு - கிழக்கில் செயற்படுத்தப்படும் சட்டம், முப்படைகளின் செயற்பாடுகளுக்கு அதிகாரத்தைப் பயன்படுத்துவது என்பன நாடாளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டத்தினாலோ அல்லது ஜனாதிபதியால் வெளியிடப்படும் வர்த்தமானி மூலமாகவே ஆகும்.

இந்த விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வெளிநாட்டவர் எவருக்கும் எந்தவித அதிகாரமும் வழங்கப்படவில்லை.

இந்த நாட்டின் அரசியலமைப் பின்படி அரச இலச்சினையைப் பாவிப்பதற்கு பிரதமருக்கு அதிகாரம் இல்லை. ஜனாதிபதியின் கையொப்பமின்றி சர்வதேச பொலிஸாருக்குத் தேவைப்படும் ஒருவருடன், கடந்த அரசு செய்துகொண்ட சமாதான ஒப்பந்தம் முழுவதுமாகவே சட்டவிரோதமானது.

இந்த நீதி விரோத சட்டத்தின்படி செயற்படுவதனாலேயே கரும்புலிகள் கொழும்பில் குண்டை வெடிக்கவைக்கின்றனர்.

சமாதான ஒப்பந்தம் குறித்து எனது கருத்தினை வெளிப்படுத்த கடந்த சில நாட்களுக்கு முன் சொல்ஹெய்மை சந்தித்து எனது ஆலோசனைகளை அவரிடம் சமர்ப்பிக்கப்போவதாக தெரிவித்திருந்தேன். அதன்படி அடுத்தவாரம் எனது ஆலோசனைகளை சொல்ஹெய்மிடம் சமர்ப்பிக்கவுள்ளேன்.

இவ்வாறு நான் சமர்ப்பிக்கவுள்ள ஆலோசனைக்கு அவர்களின் பிரதிபலனை வைத்துக்கொண்டு, அடுத்த மாதம் ஒப்பந்தத்திற்கு எதிராக வழக்கினைத் தாக்கல் செய்ய எண்ணியுள்ளதாக பேராசிரியர் தினேஸ் சேகர குணசேகர மேலும் தெரிவித்தார். (தே)

# 34 ஈழத் தமிழ் அகதிகள் மன்னார் வந்தடைந்தனர்

தமிழக மண்டப முகாமில் இருந்து 34 இலங்கை அகதிகள் தலைமன்னார் வந்தடைந்தனர்.

இந்த அகதிகளையும், இவர்களை ஏற்றிவந்த இரண்டு இந்தியப்படகோட்டிகளையும் தலைமன்னார் பொலிஸார் மன்னார் மாவட்ட பதில் நீதிவான் என்.டி.பாறூக் முன்னிலையில் பொலிஸார் ஆஜர்ப்படுத்தினர்.

இந்த 34 அகதிகளையும் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்குமாறு கிராம உத்தியோகத்தருக்கு உத்தரவிட்ட நீதிவான் படகோட்டிகளை இம்மாதம் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (201)

# பதிவு வைத்திய அதிகாரிகளின் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது!

(கொழும்பு)

பதிவு செய்யப்பட்ட மற்றும் உதவி வைத்திய அதிகாரிகள் மேற்கொண்ட வேலைநிறுத்தம் கைவிடப்பட்டுள்ளது.

பிரதமர் மகிந்த ராஜ பக்ஷ, சுகாதார அமைச்சர் நிமல ஸ்ரீபால டி சில்வா ஆகியோருடன் நேற்றுமுன்தினம் மாலை நடத்திய பேச்சுவார்த்தைகளையடுத்து இவர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிடுவதென உறுதியளித்தார்.

தங்களது சம்பள முரண்பாட்டினை செப்ரெம்பர் முதலாம் திகதிக்கு முன்னர் நீக்குவதாகவும் இதற்கான சுற்று நிருபத்தை தாமதமின்றி வெளியிடுவதாவும் சுகாதார அமைச்சர் எழுத்து மூலம் அளித்த வாக்குறுதியை அடுத்தே தாங்கள் வேலை நிறுத்தத்தை கைவிட்டுள்ளதாக மருத்துவ உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

# ஜாதிக ஹெல உறுமய பிக்குகள் பதவி விலகமாட்டார்களாம்!

## உடுவே தம்மாலோக தேரர் கூறுகிறார்

ஜாதிக ஹெல உறுமயவின் பிக்குகள் எந்தச்சந்தர்ப்பத்திலும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை கைவிடப்போவதில்லை என -அந்தக் கட்சியின் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உடுவே தம்மாலோக தேரர் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது-

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்களுக்கு எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடிபணியமாட்டார்கள்.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களுக்குச் சேவை செய்வதற்கு இடையூறாக அச்சுறுதல்கள் விடுக்கப்பட்டாலும் எமது பணிகளைத் தொடர்ந்து செய்வோம்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஹெல உறுமயவின் நோக்கங்களுக்கு முரணான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்ததுடன், இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் பற்றிய தகவல்களை தமக்கு வழங்குவதற்கு மக்கள் முன்வரவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார். (தே)

# குடாநாட்டிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றம்: தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பது அநாகரிகம்!

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



யாழ். குடாநாட்டிலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட சம்பவம் குறித்து தொடர்ந்தும் பேசுவது அநாகரிகமானது என -சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கொழும்பு தனியார் வானொலியொன்றின் நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே, அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் தனிப்பட்ட வகையில் வருத்தம் தெரிவித்தார்.

இந்த நிலையில், இந்தச் சம்பவம் குறித்து தொடர்ந்தும் பேசுவது அரசியல் அநாகரிகமானது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசே முஸ்லிம் மக்களின் ஏகோபித்த பிரதிநிதிகள் அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் ஒருசில முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களால் முஸ்லிம் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியாது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்களின் தனித்தரப்புக் கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால், அரசாங்கத்துக்கு ஆதரவுவழங்க முஸ்லிம் காங்கிரஸ் தயாராக இருப்பதாகவும் ரவூப் ஹக்கீம் மேலும் கருத்து வெளியிட்டார்.

# ஆறுமுகம் தொண்டமான் ஹொங்கொங் பயணம்!

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகம் தொண்டமான் கடந்த சனிக்கிழமை ஹொங்கொங் நாட்டுக்கான சுற்று பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

சில தினங்கள் அவர் அங்கு தங்கியிருப்பார் என்றும், இவரது சுற்றுப்பயணம் தனிப்பட்ட விஜயம் என்றும் காங்கிரசின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றம் எதிர்வரும் 20ஆம் திகதி கூடும்போது, அவர் கலந்துகொள்வதற்கு வசதியாக நாட்டுக்குத் திரும்புவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (தே)

# செவ்வாயன்று நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிரூபிப்போம்

## பிரதி அமைச்சர் அன்வர் இஸ்மாயில்

(கொழும்பு)

எதிர்வரும் 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தமது பெரும்பான்மையை நிரூபிக்கும் என- கிழக்கு மாகாண கட்டமைப்பு பிரதி அமைச்சர் அன்வர் இஸ்மாயில் தெரிவித்தார்.

கல்முனையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர், அரசாங்கம் தமது நாடாளுமன்ற பெரும்பான்மையை நிரூபிக்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மூவர் அரசாங்கத்தின் பெரும்பான்மையை நிருபிக்க உதவுவர்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவம் தொடந்தும் ஐக்கிய தேசிய கட்சிக்கு சார்பாக நடந்துக் கொள்ளும் கட்சியாகவே செயற்பட்டு வருகிறது. இதனால், முஸ்லிம் மக்களுக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டு வருகிறது.

நாட்டின சமாதானமானது மூன்று இனங்களுக்கும் திருப்தி தரக்கூடிய வகையிலேயே அமையவேண்டும் என்பதில் ஜனாதிபதி கரிசனையாக இருக்கிறார்.

எனவேதான் சமாதான பேச்சுவார்த்தையை எந்த இடத்தில் இருந்து ஆரம்பிப்பது என்பதில் சற்று தாமத நிலை ஏற்பட்டுள்ளது.

சமாதானம் மூவினத்துக்கும் திருப்தியாக அமையவேண்டும் என்பதற்காக ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கும் தாம் ஜனாதிபதி தமக்கு துரோகமிழைத்தால் உடனடியாக அரசாங்கத்தைவிட்டு வெளியேறப் போவதாகவும் அன்வர் இஸ்மாயில் தெரிவித்தார்:

# ஹெல உறுமயவின் ஆதரவாளர்கள் கட்சியிலிருந்து வெளியேறுகின்றனர்

## கட்சிக்குள் தோன்றியுள்ள புதிய நெருக்கடி

ஜாதிக ஹெல உறுமயவுடன் அதிருப்தியடைந்த நிலையில் அதன் பொதுச் செயலாளர் திலக் கருணாரட்ன கட்சியிலிருந்து விலகிச் சென்றதையடுத்து, மேலும் பல ஆதரவாளர்களும் அந்தக் கட்சியிலிருந்து விலகிச்சென்றுள்ளனர்.

அத்துடன், இதுவரை காலமும் கட்சிக் காரியாலயமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த தனது வீட்டிலிருந்து ஜாதிக ஹெல உறுமயவினர் விலகிச் செல்ல வேண்டும் எனவும் திலக் கருணாரட்ன கோரிக்கை விடுத்துள்ளார்.

கட்சியில் உள்ள சாதாரண மக்களை நாடாளுமன்றத்துக்கு செல்லும் வகையில் பிக்குகள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கும் தமது நாடாளுமன்றப் பதிவுகளை ராஜினாமாச் செய்ய வேண்டுமென திலக் கருணாரட்னவால் விடுக்கப்பட்டவேண்டுகோள், ஜாதிக ஹெல உறுமயவின் தலைமைப் பீடத்தால் நிராகரிக்கப்பட்டமை காரணமாகவே கட்சியின் சகல பொறுபபுக்களிலிருந்தும் விலகிச்செல்லவதென திலக் கருணாரட்ன தீர்மானித்ததாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, கட்சியில் அங்கம் வகிக்கும் சாதாரண மக்களை நாடாளுமன்றத்துக்கு அனுமதிக்கும் வகையில் நாடாளுமன்றப் பதவியிலிருந்து பிக்குகள் ஒருபோதும் ராஜினாமாச் செய்யமாட்டார்கள் என ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் உடுவே தம்மாலோக தேரர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் ஜாதிக ஹெல உறுமயவை பிரதிநித்துவப்படுத்துபவர்களாக பிக்குகள் இருக்கின்றவரை மட்டுமே கட்சியினால் அரசியலில் நீண்ட தூரம் பயணிக்க முடியுமெனவும், கட்சியில் அங்கம் வகிக்கும் சாதாரண மக்கள் கட்சியின் வளர்ச்சிக்கான ஆலோசகர்களாக மட்டுமே இருக்க முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சச்சுமாஸ்டரை சுட்டவர் மொனறாகல சிறைக்கு!

விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட கருணாவின் சகாவான சச்சுமாஸ்டர் மற்றும் பிரதீபன் ஆகிய இருவரையும் மட்டக்களப்பு சிறைச்சாலைக்குள் வைத்துசுட்டுக்கொன்ற மகேந்திரன் புவிதரன் என்பவர் நேற்று மொனராகல சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படையினர் மற்றும் பொலிஸார் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் இவர் மொனராகலவுக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இதேவேளை, மட்டக்களப்புச் சிறைச்சாலையில் வியாழக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து சிறைச்சாலைக்கு கூடியபாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

மேலதிகமாக பொலிஸாரும் , படையினரும் சிறைச்சா லைக்கு வெளியே பாதுகாப்புக் கடமையிலீடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அதேசமயம், மட்டக்களப்பு நகரிலும் கூடியளவு படையினர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதுடன் சோதனைச் சாவடிகளும் அமைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (01)

# பாகிஸ்தான் 173 ஓட்டங்களால் ஹொங்கொங்கை தோற்கடித்தது






ஆசியக் கிண்ண போட்டியின் 'ஏ' பிரிவில் நேற்றுப் பாகிஸ்தான் - ஹொங்கொங் அணிகளுக்கிடையில் நடைபெற்ற ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 173 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

பாகிஸ்தானின் இந்த வெற்றிக்கு அந்த அணியின் சொகைப் மலிக், யுனுஸ்கானின் சதமும், சொகைப் மலிக் கைப்பற்றிய நான்கு விக்கெட்டுக்களுமே காரணமாகும்.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் இருவரும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர்.



அதன் பின்னர் ஜோடி சேர்ந்த சொகைப் மலிக், யுனுஸ்கான் இருவரும் சிறப்பாக விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். இறுதியாக பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 343 ஓட்டங்களைக் குவித்தது.

இந்த அணி சார்பில் சொகைப் மலிக் 118 , யுனுஸ்கான் 144, இம்ரான் பர்கத் 20 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் காலித்கான் 2, அப்சல் ஹைடர், இலியாஸ் குல் 'இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு மிகப்பெரிய இலக்குடன் களமிறங்கிய ஹொங்கொங் அணி 44.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 165 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இவ்வணி சார்பாக சிமாட் 25, தபராக்தார் 36, செருபரம்பில் 30, அப்சல் ஹைடர் 22 ஆகியோர் கூடுதலான ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சொகைப் மலிக் 4, இம்ரான் பர்கத் 3, மொகமட்சமி 2, அப்துல் ரஸாக் ஒரு விக்கெட்டையும் கைபபற்றினர்.

'ஏ' பிரிவில் பாகிஸ்தான் 12 புள்ளிகளுடனும், பங்களாதேஷ் 6 புள்ளிகளுடனும் உள்ளன.

# இலங்கை அணி 116 ஓட்டங்களால் எமிரேட்ஸ் அணியை வீழ்த்தியது!



ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் தம்புள்ளவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் இலங்கை அணி 116 ஓட்டங்களால் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியைத் தோற்கடித்தது.

பகல் - இரவாக நடந்த இந்த ஆட்டத்தில் இலங்கை அணி நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடியது.

எமிரேட்ஸ் அணியின் அபார பந்துவீச்சினால் இலங்கை அணி வீரர்கள் குறிப்பிடத்தக்க ஓட்டங்களை எடுக்கமுன்னரே ஆட்டமிழந்து சென்றனர். குணவர்த்தன மட்டும் 73 ஓட்டங்களை எடுத்தார்.

ஜெயந்த 18, ஜெயசூரியா 21, சங்ககார 17, ஜெயவர்த்தன 26, டில்சான் 06, கந்தம்பே 4, சந்தன 21 சொய்சா 21, முரளிதரன் 3, மாலிங்க ஆட்டமிழக்காமல் 5 ஓட்டங்களைப் பெற்றனர்.

50 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 239 ஓட்டங்களைப் பெற்றது. இதில் 24 ஓட்டங்கள் உதிரிகளாகும்.

எமிரேட்ஸ் அணி சார்பில் பந்து வீசிய குரம்கான் 4, அலிஅசாட் 2, சயிட் மக்சூட் 1, சமீர்ஷியா 1, அர்ஷத் அலி 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய எமிரேட்ஸ் அணியை இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் திககுமுக்காடச் செய்தனர்.

இதனால் சீரான வேகத்தில் விக்கெட்டுக்களைப் பறிகொடுத்த எமிரேட்ஸ்அணி 47.5 ஓவர்களிலேயே 123 ஓட்டங்களுக்குள் சகல விக் கெட்டுக்களையும் இழந்து தோல்வியடைந்தது.

ராம்வீர்ராஜ் 39, ஓட்டங்களை அதிக பட்சமாகப் பெற்றார். இலங்கை அணியும 24 உதிரி ஓட்டங்களைக் கொடுத்திருந்தது.



பந்துவீச்சில் உபுல்சந்தன 22 ஓடடங்களுக்கு 4 விக்கெட், முரளிதரன் 21 ஓட்டங்களுக்கு 3 விக்கெட், சொய்சா 11 ஓட்டங்களுக்கு 2 விக்கெட், மாலிங்க 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

# இந்தியா - அவுஸ்ரேலியா இடையே ஒக்ரோபரில் டெஸ்ட் போட்டி ஆரம்பம்!

அவுஸ்ரேலிய அணி எதிர்வரும் செப்ரெம்பர் 30 ஆம் திகதிமுதல் நவம்பர் 8 ஆம் திகதிவரை இந்தியாவில் சுற்றுப்பயணம் செயது விளையாடவுள்ளது.

அவுஸ்ரேலிய அணி இந்தியாவுடன் 4 டெஸ்ட் மற்றும் 3 நாள் பயிற்சி ஆட்டத்தில் ஆடவுள்ளது. அவுஸ்ரேலிய அணி, இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் அணியுடன் மோதும் பயிற்சி ஆட்டம் செப்ரெம்பர் 30 ஆம் திகதிமுதல் ஒக்ரோபர் 2 ஆம் திகதி வரை நடைபெறும்.

இரு அணிகள் இடையேயான முதல் டெஸ்ட் ஒக்ரோபர் 6 தொடக்கம் 10 ஆம் திகதிவரையும், இரண்டாவது டெஸ்ட் 14 தொடக்கம் 18 ஆம் திகதிவரைக்கும் அடுத்த மூன்றாவது டெஸ்ட் 26 தொடக்கம் 30 ஆம் திகதிவரையும் கடைசி டெஸ்ட் நவம்பர் 3 தொடக்கம் 7 ஆம் திகதிவரையும் நடபெறவுள்ளது. இரு அணிகளிடையே ஒருநாள் போட்டி நடைபெறமாட்டாது.

கல்கத்தா, மும்பை, சென்னை ஆகிய இடங்களில் டெஸ்ட்போட்டி நடைபெற வாய்ப்பு இருக்கிறது. மற்றொரு டெஸ்ட் போட்டிக்கு சண்டிகார், பெங்களூர் இடையே கடும்போட்டி உள்ளது. டெல்லியில் டெஸ்ட் போட்டி நடைபெறுவதற்கான வாய்ப்பு இல்லை.

அவுஸ்ரேலியா கடைசியாக 2001 ஆம் ஆண்டு இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து டெஸ்ட் தொடரை 1 - 2 என்ற கணக்கில் இழந்தது.

# இந்திய அணியின் விளையாட்டு திருப்திகரமாக இருந்தது!

## கங்கூலி கருத்துத் தெரிவிப்பு



ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் இந்திய அணியின் விளையாட்டு திருப்தி அளிப்பதாக கங்கூலி தெரிவித்தார்.

ஆசிய கிண்ண கிரிக்கெட் ஆரம்பப் போட்டியில் இந்தியா 116 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியை வீழ்ததியது. இந்தப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி தொடக்கத்தில் லேசாகத் தடுமாறினாலும் அதன் பிறகு சிறப்பாக விளையாடி 260 ஓட்டங்களை எடுத்தது.

தொடக்கத்தில் நாம் லேசாக திணறும் நிலை ஏற்பட்டது. ஆனால், அதன்பிறகு சிறப்பாக விளையாடி நல்ல ஓட்டங்களை எட்டினோம். இந்தப் போட்டி நடைபெற்ற மைதானத்தில் 260 ஓட்டங்கள் என்பது நல்ல ரன்களே என நினைக்கிறேன்.

3 மாதத்துக்குப் பிறகு விளையாடும் முதல்போட்டி இது என்பதால் தொடக்கத்தில் தடுமாற்றம் ஏற்பட்டுள்ளது. இலங்கைக்கு எதிரான போட்டியில் இதனை சரிசெய்து விடுவோம்.

அதேபோலத்தான் ஆரம்பத்தில் சில புதிய முயற்சிகளை நமது பந்துவீச்சாளர்கள் மேற்கொண்டனர். வலுவான அணிக்கு எதிராக விளையாடும்போது, நமது வீரர்களின் பந்துவீச்சு அதற்கு ஏற்றவாறு இருக்கும். கட்டுப்பாடு இருக்கும் என்று கூறினார்.

# 200 மீற்றர் ஓட்டத்தில் மரியன் தகுதியிழப்பு!

தற்போதைய 200 மீற்றர் ஒலிம்பிக் சம்பியனான மரியன்ஜோன்ஸ் அமெரிக்காவில் நடைபெற்ற ஒலிம்பிக் தகுதிப் போட்டியில் தோல்வியடைந்து - போட்டியில் பங்குகொள்ளும் வாய்ப்பை இழந்தார்.

கடந்த முறை ஒலிம்பிக் போட்டியில் 5 தங்கப்பதக்கங்களை வென்ற மரியன்ஜோன்ஸ் இம்முறை 100 மீற்றர் தகுதிச்சுற்றிலும் தோல்வயடைந்து போட்டியில் பங்குகொள்ளும் வாய்ப்பை இழந்தார்.

ஆனாலும், நீளம் பாய்தலில் இவர் ஒலிம்பிக்கில் பங்குகொள்ளத் தகுதிபெற்றுள்ளார்.




# காலிறுதிப் போட்டியில் ஆர்ஜன்ரீனா தகுதி!




கோபா அமெரிக்க கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் விளையாட ஆர்ஜன்ரீனா தகுதி பெற்றது. அந்த அணி 1 - 0 என்ற கோல் கணக்கில் பெருவை தோற்கடித்து அரையிறுதிக்குள் நுழைந்தது.



தென் அமெரிக்க கண்டத்தில் உள்ள நாடுகள் பங்கேற்கும் கோபா அமெரிக்க கிண்ண உதைபந்தாட்டப் போட்டி பெரு நாட்டில் நடைபெற்றுவருகிறது.

காலிறுதி ஆட்டங்கள் இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை தொடங்கின. ஒரு அரை இறுதியில் 'ஏ' பிரிவில் 2 ஆவது இடத்தை பிடித்த பெரு - 'பி' பிரிவில் 2 ஆவது இடத்தை பிடித்த ஆர்ஜன்ரீனா அணிகள் மோதின.

ஆர்ஜன்ரீனா தொடக்கத்தில் இருந்தே சிறப்பாக ஆடியது. கோல் அடிக்கும் பல வாய்ப்புக்களை அந்த அணி வீரர்கள் தவற விட்டனர். முதற்பாதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் கோல் எதுவும் அடிக்கவில்லை.

57 ஆவது நிமிடத்தில் ஆர்ஜன்ரீனாவுக்கு 'பிரீகிக்' வாய்ப்பு கிடைத்தது. இதைப் பயன்படுத்தி அந்த அணி வீரர் கார்லோஸ் தெவஸ் மிகவும் அருமையாக கோல் அடித்தார். இந்த கோல் நம்பமுடியாத வகையில் பிரமாதமாக இருந்தது. பெரு அணியால் ஆட்டநேரம் முடியும்வரை பதில் கோல் அடிக்க முடியவில்லை.

இதனால் ஆர்ஜன்ரீனா 1 - 0 என்ற கோல் கணக்கில் வென்று அரை இறுதிக்குத் தகுதி பெற்றது. உள்ளூர் ரசிகர்களின் ஆதரவு அமோகமாக இருந்தும், பெரு அணியால் வெற்றிபெற முடியாமல் போனது. ஆர்ஜன்ரீனா அரை இறுதியில் கொலம்பியா அல்லது கோஸ்டாரிகாவை சந்திக்கும். இன்று நடைபெறும் கால் இறுதியில் பராகுவே - உருகுவே அணிகளும், பிரேசில் - மெக்சிக்கோ அணிகளும் மோதவுள்ளன.

## இளையோர் உதைபந்தாட்டம்

# அரையிறுதி அணிகளை தீர்மானித்த முதல் நாள் மாலைநேர ஆட்டம்!

தமிழீழ விளையாட்டுத்துறையின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் ஆரம்பமான தமிழீழ தேசிய இளையோருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் -

நேற்றுமுன்தினம் பிற்பகல் நடைபெற்ற முல்லை - மன்னார் அணிகளுக்கிடையிலான போட்டியில் இரு அணிகளும் கோல் எதுவும் போடாததால் போட்டி சமநிலையில் முடிவுற்றது.

தொடர்ந்து அம்பாறை கிளிநொச்சி அணிகளுக்கிடையிலான போட்டியில் இரு அணிகளும் கோல் எதுவும் போடாததால் இப்போட்டியும் சமநிலையில் முடிவுற்றது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் சுவிஸ் அணி வீரர்கள் ம.சிந்தூரஸ்கர், சி.சுகநிதன், த.ஆதவன் ஆகியோர் தலா ஒரு கோல் போட்டு 3-0 என்ற கோல் கணக்கில் தமது அணி முல்லை அணியை வெற்றிபெற வழிசமைத்தனர்.

இப்போட்டிகளின் முடிவில் யாழ்.சுவிஸ் அணிகள் அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவாகின. அம்பாறை, கிளிநொச்சி, திருமலை அணிகள் சம புள்ளிகளைப் பெற்றிருந்தமையால், சமநிலை உடைப்பின் மூலம் அரையிறுதிப் போட்டிக்கு தெரிவாகும் அணிகள் தீர்மானிக்கப்பட்டன.

இதன்படி, சுவிஸ் அணியை எதிர்த்து விளையாட அம்பாறை அணியும், யாழ். அணியை எதிர்த்து விளையாட கிளிநொச்சி அணியும் தகுதிபெற்றன.

19 வயதுக்குட்பட்டோருக்கான அரையிறுதிப் போட்டியில் திருமலை அணி 3-1 என்ற கோல் கணக்கில் மன்னார் அணியை வெற்றிகொண்டு இறுதிப்போட்டிக்குத் தெரிவாகியது.

திருமலை அணியின் சார்பில் பி.கமல்நாத் இரு கோல்களையும், றொகிஷோக்குமார் ஒரு கோலையும், மன்னார் அணியின் சார்பில் த.ரஜீவ்குமார் ஒரு கோலையும் போட்டனர்.

தொடர்ந்து நடைபெற்ற 17 வயதுக்குட்பட்டோருக்கான அரையிறுதிப் போட்டியில் அம்பாறை அணி 2-0 என்ற கோல்ககணக்கில் திருகோணமலை அணியை வெற்றிகொண்டு இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது. ஷிகான், இர்பான் ஆகியோர் கோல் போட்டனர்.

# உதைபந்தாட்ட போட்டி

தமிழீழ விளையாட்டுத்துறை யாழ்.மாவட்டப் பிரிவின் அனுமதியுடன் - பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் வதிரி தேவரையாளி - யங்.லயன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் -

இன்று பிற்பகல் 3 மணிக்கு யங் கம்பன்ஸ் அணியை எதிர்த்து கலைமகள் அணியும், பிற்பகல் 4 மணிக்கு கலட்டி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கருணாகரன் விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளன.(13)

# வேரொண்டை கொல்களத்தை வேறு இடத்திற்கு மாற்றவும்!

## கட்டைவேலி சனசமூக நிலையம் கோரிக்கை

(நெல்லியடி)

கரவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட வேரொண்டை மயானப் பகுதியை அண்டியுள்ள இடத்தில் நீண்ட நாட்களாகப் பயன்படுத்தப்பட்டு வரும் கொல்களத்தை வேறிடத்துக்கு மாற்றவேண்டுமென்று கட்டைவேலி சனசமூகநிலைய நிர்வாகம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

வேரொண்டைக் கொல்களம் வேறிடத்துக்கு மாற்றப்பட வேண்டுமென்பதற்காகப் பின்வரும் காரணங்களை அவர்கள் முன்னிலைப்படுத்தியுள்ளனர்.

இந்தக் கொல்களம் அமைந்துள்ள பகுதியை அண்டிவாழும் மக்கள் இந்தக் கொல்களத்திலிருந்து வரும் துர்நாற்றத்தைச் சுவாசிக்க முடியாது கஷ்ரப்படுகிறார்கள், இந்தக் கொல்களம் துர்நடத்தைக்குப் பயன்படுத்தப்படுகிறது, மயானத்தில் அமைந்துள்ள கிணறு பாவிக்கமுடியாதளவுக்கு கழிவுப்பொருட்கள் நிறைந்து அசுத்தப்படுத்தப்படுகிறது.

கொல்களத்தில் வெட்டப்படும் மிருகங்களின் எச்சங்கள் பறவைகள், நாய்கள் போன்றவற்றால் சுற்றாடலிலுள்ள வீடுகளுக்குள் எடுத்து வரப்பட்டுப் போடுவதால் தொற்று நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு. ஒந்திராய், நுணுவில் வாய்க்கால்கள் இந்தக் கழிவுப்பொருட்களால் நிறைந்து காணப்படுகின்றன.

சிகை அலங்கரிப்பாளர்களும் தமது நிலையத்தில் சேகரிக்கப்படும் கழிவுகளையும் இந்தப் பகுதியிலேயே கொட்டுகின்றனர்.

எனவே இந்தக் காரணங்களைக் கவனத்தில் எடுத்து குறிப்பிட்ட கொல்களத்தை வேறிடத்துக்கு மாற்ற வேண்டுமென்று பிரதேச செயலகம், சுகாதாரப்பகுதியினர், பிரதேச சபை, விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவு என்பனவற்றிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (13)

## விளையாட்டு விஞ்ஞானத்துறை

# மாணவர்கள் இன்றுமுதல் பகிஷ்கரிப்புக்குத் திட்டம்!

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞானத்துறை மூன்றாம் வருட மாணவர்கள் தாம் முன்வைத்த கோரிக்கைக்குத் தீர்வுகாணப்படாமையையடுத்து இன்றுமுதல் வகுப்புக்களைப் பகிஷ்கரிக்கப்போவதாக அறிவித்துள்ளனர்.

தமது கோரிக்கைகள் குறித்து நேற்றுமுன்தினம் மாலை அறிக்கையொன்றை அவர்கள் வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

விளையாட்டு விஞ்ஞான அலகில் கல்வி கற்கும் மாணவர்கள் மூன்றாம் வருட கற்கைநெறி தொடர்பாக முன்வைத்த கோரிக்கைக்கு திருப்திகரமான நடவடிக்கை எடுக்க வேணடும் என்றும், இதனால், தமது கோரிக்கைக்குத் தீர்வு காணப்படும் வரை சாத்வீகப் போராட்டம் நடத்தப் போவதாகவும் அறிவித்துள்ளனர்.

# நிலத்தடி மின்னிணைப்புக்களால் வீதியைத் திருத்தமுடியாத நிலை!

(மானிப்பாய்)

விவசாய வீதியை ஊடறுத்துச் செல்லும் நிலத்தடி மின்கம்பங்களின் இணைப்பால் கேலன்காமம் வைரவர் கோயிலடி விவசாயிகள் இந்த வீதியைப் புனரமைக்க முடியாதுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தினர் தெரிவிக்கையில் -

கேலன்காமம் வைரவர் கோயில் வீதி - டச்சு வீதி மின்கம்பங்களின் நிலத்தடி இணைப்புக்கள் வீதியிலுள்ளமையால் விவசாயக் காணிகளுக்கு போக்குவரத்தை மேற்கொள்ளமுடியாதுள்ளமையால், மின் இணைப்புக் கம்பிகளின் நிலத்தடுப்பு இணைப்பை வீதியை விட்டு வேறு பக்கம் மாற்றுமாறு உரிய அமைப்புக்களிடம் கேட்டுள்ளதாகத் தெரிவிததனர்.

இதனால், வீதிப் புனரமைப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், வாகனப் போக்குவரத்தையும் இந்த வீதியால் மேற்கொள்ளமுடியாதுள்ளதாக இந்தப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர். (91)

# மட்டுவில் பிரதேச வீதிகள் சிரமதானம் மூலம் துப்புரவு

பிரதி ஞாயிற்றுக்கிழமைதோறும் கல்வயல் கிராம அலுவலர் பிரிவில் உள்ள வீதிகளில் தலா ஒன்று சிரமதானம்மூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

கல்வயல் கிராம அலுவலர் வை. இராசரத்தினத்தின் ஏற்பாட்டில் கல்வயலில் உள்ள பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து இந்தப் பணியைச் செய்துவருகின்றன.

இதனை ஒரு முன் உதாரணமாகக்கொண்டு ஏனைய கிராம அலுவலர்களும் தத்தம் பிரிவில் உள்ள வீதிகளைச் செப்பனிட முயற்சி எடுத்தல் ஆரோக்கியமான் ஒரு நிகழ்வாக இருக்குமென மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

குறிப்பாக மட்டுவில் வடக்கு, சந்திரபுரம், மட்டுவில் கிழக்குப் பகுதியில் உள்ள பெரும்பாலான வீதிகள் பற்றைகளால் மூடப்பட்டும், குப்பைகள் தேங்கியும் காணப்படுவதால் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையும், மழைகாலங்களில் மழைநீர் வழிந்தோடமுடியாத நிலையும் காணப்படுகின்றது.

இவற்றை அரசோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களோ செய்து தரும் என எதிர்பார்க்காது, நாமே நமது தேவைகளைப் பொதுநோக்கோடு சிந்தித்துச் செயலாற்றினால் பெருநனமை பயக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (24)

# சின்னஞ்சிறு செய்திகள்

### மோட்டார் சைக்கிள் திருட்டு

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திருட்டுப்போயுள்ளதாக யாழ்.குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. கிளிநொச்சியைச சேர்ந்த சிதம்பரம் தேவராஜ் என்பவரே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கிளிநொச்சிப் பகுதியிலிருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு தனது மனைவியைக் கொண்டுவந்த சமய'மே யமஹா ரக மோட்டார் சைக்கிள் திருடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தீ)

### உள்ளூராட்சி வார நிகழ்வு

(தெல்லிப்பழை)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு தெல்லிப்பழை, காங்கேசன்துறை, மல்லாகம், மயிலிட்டி ஆகிய நூல் நிலையங்கள் இணைந்து நடததும் 'நூலக தகவல் விஞ்ஞானமும், தொடர்பு சாதனங்களும்' எனும் நிகழ்வு, நாளை காலை 9.30 மணிக்கு தெல்லிப்பழை பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

### மெமோறியல் பாடசாலை முத்தமிழ் விழா

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை முத்தமிழ் மன்றம் வழங்கும் முத்தமிழ் விழா இன்று காலை 9 மணிக்கு அழகரட்ணம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாநிதி சொக்கலிங்கமும், சிறப்பு விருந்தினராகக் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸும், புதுவை இரத்தினதுரையும் கலந்துகொள்ளவுள்ளனர். (44)

### வெண்மை நாடகத்துக்கு 5 ஆம் இடம்

(யாழ்ப்பாணம்)

கியூடெக் நிறுவனத்தால் நடத்தப்பட்ட சிறுவர்களின் இன்னல்கள், துன்பஙகளைச் சித்தரிக்கும் வகையிலான நாடகப்போட்டியில் ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி சமாதானக் குழுவினரின் 'வெண்மை' என்ற நாடகம் 5 ஆம் இடத்தைப் பெற்றுள்ளது.

நடிக கலாமணி ஏ.நவஜீவாவினால் நெறியாள்கை செய்யப்பட்ட இந்த நாடகத்துடன் 13 நாடகங்கள் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

### முல்லை மாவட்ட நுண்கலைக் கல்லூரியின் தமிழிசை விருந்து

முல்லை மாவட்ட நுண்கலைக் கல்லூரியின் ஆடி மாதத் தமிழிசை விருந்து எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

### அடிக்கல் நாட்டு விழா

(நயினாதீவு)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை இறைபணிகள் இல்லத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நாளை மறுதினம் நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

### பரிசளிப்பு விழா

பன்னாலை சேர் கனகசபை அமெரிக்கன் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று பாடசாலை அதிபர் நா.ஆனந்தராசா தலைமையில் பாடசாலை மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் நெஜினா இருதயநாதனும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.சுந்தரசிவமும் கலந்துகொள்ளவுள்ளனர். (72)



*மக்கள் நலன்புரிச் சங்கம் நடத்திய மகளிர் படையணிகளுக்கான பயிற்சிப் பாசறையில் வெற்றியீட்டிய மாணவியொருவருக்கு, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் கேடயம் வழங்குவதைப் படத்தில் காணலாம். (111)*

# வடமராட்சி கடற்பரப்பில் மீண்டும் அத்துமீறும் இந்திய மீனவர்கள்!

வடமராட்சி கடலில் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் அத்துமீறி நுழைந்து மீன்பிடிப்பதாக வடமராட்சி வடக்கு மீனவர் சங்கங்களின் சமாசம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறிப் பிரவேசித்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட இழுவைப் படகுகள் தரித்து நின்று மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளன. இதேவேளை, கடற்படையினரோ, கரையோரக் காவற்பணியில் ஈடுபட்டிருக்கும் படையினரோ இதற்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற இலங்கை - இந்திய மீனவ சங்கங்களின் பிரதிநிதிகளுக்கிடையிலான கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு மாறாகவே இந்திய மீன்பிடிப் படகுகள் அத்துமீறிப் பிரவேசித்துள்ளமை குறித்து வடமராட்சி மீனவர்கள் விசனம் தெரிவித்தனர். (17)

# நெடுந்தீவில் ஆசிரியர் பற்றாக்குறை; கல்விச் செயற்பாடுகள் பின்னடைவு!

(நெடுந்தீவு)

நெடுந்தீவுக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளில் நீண்ட காலமாக உடற்கல்வி மற்றும், அழகியல் பாடங்களுக்கான ஆசிரியர்கள் நியமிக்கப்படாமையால், இந்தத் துறைகளில் ஆர்வமுள்ள பல மாணவர்களின் வளர்ச்சி பாதிப்படைந்து செல்கின்றது.

சங்கீதம், நடனம் ஆகிய அழகியல் பாடங்களில் திறமையான மாணவர்கள் உள்ளபோதும், அவர்கள் தங்களது திறமையை வளர்த்து உயர்கல்வியைத் தொடரமுடியாத நிலையில், வேறு அழகியல் பாடங்களுக்கு உள்ள ஆசிரியர்களால் கற்பிக்கும் பாடங்களை விரும்பியோ, விரும்பாமலோ கற்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதுடன், பண்ணிசைப் போட்டிகள், தமிழ்த்தினப் போட்டிகள் போன்றவற்றுக்கு பாடசாலை மட்டங்களில் தற்போதுள்ள வளத்தைவைத்தே பங்குபற்றும் நிலையும் உள்ளது.

இதேபோன்றுதான் விளையாட்டு நிகழ்வுகளும், உடற்கல்வி ஆசிரியர் இன்மையால் ஏனைய ஆசிரியர்களின் வழிகாட்டல்களிலேயே போட்டிகளில் கலந்து தமது திறமைகளை வெளிக்கொண்டுவருகின்றனர்.

பயிற்றுவிப்பாளர்கள் இன்றியே தமது திறமைமூலம் முன்னேறும மாணவர்களுக்கு ஒரு உடற்கல்வி ஆசிரியர் இருப்பின் மேலும் முன்னேறும் வாய்ப்புகள் உண்டு.

இந்தப் பாடங்களுக்கு தனிப்பட்ட முயற்சி எடுத்து வெளியிடங்களுக்குச் சென்று தமது திறமைகளை வளர்த்துக் கொள்ளக்கூடிய பொருளாதார வசதியற்ற மாணவர்களே பெருமளவில் இங்கு இருப்பதால் பொறுப்பானவர்கள் இதிலே தனிப்பட்ட கவனமெடுத்து நியமனங்களைச் செய்யவேண்டுமென மாணவர்கள், பெற்றோர்கள் மத்தியில் ஒரு எதிர்பார்ப்பு உள்ளமை இங்கே சுட்டிக்காட்டத்தக்கதாகும். (113)

### வாராந்த சொற்பொழிவு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை, வெள்ளிக்கிழமைதோறும் நடத்திவரும் வாராநத நிகழ்வின் தொடரில் - எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு பெரியபுராணம் தொடரில், சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் சொற்பொழிவாற்றுவார். இதன் அறிமுகவுரையை சி.கிருஷ்ணபிள்ளை நிகழ்த்துவார். (17)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஐந்தாவது அகவையில்



பெயர் : தயாபரன் வாஹினி
முகவரி : 90,மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

ஏழாவது அகவையில்



பெயர் : இ.இனிஸ்ரன்
முகவரி : கற்பகப்பிள்ளையார் கோயிலடி , உடுவில் கிழக்கு.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்






சிறுகதை

# ஒன்றித்த உணர்வுகள்



பூஞ்சிட்டு

இன்றைக்கு 15 வருடங்களுக்கு முன்னர் சந்தித்துக் கொண்டது. இன்று தொலைபேசியில் கதைக்கும் வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. யாழ்ப்பாணம் தொலைத்தொடர்பு நிலையத்தில் இருந்து என் நண்பருக்கு கோல் எடுத்தேன்.

என்னுடைய நண்பன் கனடாவிலை இருக்கிறான். அவனின்ரை சொந்தக்காரர் வன்னியிலை இருந்து இப்பதான் யாழ்ப்பாணத்திலை ஒரு வீடு வாங்கிக் கொண்டு குடிவந்திருக்கினம்.

ஏதேச்சையாய் நண்பனின் வீட்டுக்காரைப் பஸ் நிலையத்தில் சந்தித்த போது அவர்கள் தான் என்னை அடையாளம் கண்டு, என்னைப் பற்றி நண்பன் அடிக்கடி விசாரிப்பதாகவும், ரெலிபோன் நம்பர் கொடுத்து கதைக்கச் சொன்னதாகவும் கூறினார்கள்.

இலங்கையிலை இருந்து கனடாவிற்கு கோல் எடுக்கிறதெண்டா செலவுதான். செலவைப் பார்த்து என்ன செய்கிறது. மனிசர் தேவைஎன்றால் செலவழிக்கத் தானே வேண்டும், என்று நினைத்தபடி இப்போது தொலைத்தொடர்பு நிலையத்தில் கனடாவுக்கான அழைப்புக்கு ரெலிபோன் நம்பரைக் கொடுத்துவிட்டு காத்திருந்தேன்.

தொலைபேசி அழைப்புக்கென காத்திருந்த அந்த அறையில் நான் அமர்ந்திருந்த கதிரைக்கு மேல் காற்றாடி சுழன்றபடி இருந்தது. அந்தக் காற்றாடியின் சுழற்சிக்கு ஏற்றால் போல் என்னுடைய நினைவுகளும் 15 வருடங்களுக்கு முன்னர் நடந்த சம்பவங்களை அசைபோடத் தொடங்கியது.

கீரிமலைக்கு அண்மையில் உள்ள ஒரு சிறிய கிராமத்தில் தான் எமது கிராமம் அமைந்துள்ளது. அந்தக் கிராமம் தற்போது உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசமாக விளங்குகின்றது. எமது ஊரின் நடுவேயுள்ள ஆலமரமும் அதன் கீழே அமர்ந்திருந்து ஊர்க்கதைகளை பேசிக்களிக்கும் பழசுகளும், அந்தப் பழசுகளின் கதைகளைக் கவனியாமல் தன் பாட்டுக்கு பாரம்பரிய விளையாட்டுகளை விளையாடிக் கொண்டிருக்கும் சிறுவர்களும், என அந்தச் சிறிய ஊர் என்றும் கல கலவென்று இருக்கும்.

ஆலமரம் என்றாலே அதன் கீழ் ஒரு கோயில், அதன் அருகினில் ஒரு வாசகர்சாலையும் என கிராமத்தின் ஒற்றுமைக்கு அடையாளமான சின்னங்கள் எமது ஊரிலும் இருக்கின்றன.

கோயில் மிகப் பழமையானதாக இருந்தமையால் அந்தக் கோயிலை உடைத்து புதிய கோயில் கட்ட வேண்டும் என சில இளைஞர்கள் கருத்துத் தெரிவித்த போது, அந்தக் கோயிலில் ஒவ்வொரு நாளும் பூசை செய்யும் அந்த வயோதிபர் கூறிய வார்த்தைகள் இன்றைக்கும் நினைவுக்கு வருகின்றன.

பாரம்பரியமாகக் காணப்படுகின்ற இந்தக் கோயிலை உடைத்துப் புதிதாகக் கட்டி என்ன செய்யப் போகிறியள் இந்தக் கோயிலின் புனிதத் தன்மை கோயில் உடைக்கப்படும் போது கெட்டுவிடப் போகின்றது. இந்தக் கோயிலை என்ரை அப்பா, அப்பப்பா என எத்தனை தலைமுறை கும்பிட்டுக் கொண்டு வருகின்றது எனக் கூறி கோயிலை இடிக்கவிடாமல் தடுத்த இந்த முதியவர் இன்றில்லை.

அந்தச் சிறிய கோயில் வயோதிபரின் வேண்டுகோளுக்கு ஏற்ப இடிக்கப்படாமல் இருந்தது. ஆனால் இன்று அவரின் ஆசைக்கு ஏற்ப ஒரு வேளை பூசைகூட செய்ய முடியாத நிலையில் உள்ளது.

பூசை இல்லாமல் இருந்தாலும் பரவாயில்லை கோயிலாவது இருக்கின்றதா என்றால் அதுவும் கேள்விக்குறியாகவே உள்ளது.

அந்தக் கோயிலடியில் நாங்கள் - நானும் எனது நண்பனும் எத்தனை குழப்படிகளைச் செய்திருப்பம். ஒரு நாள் மாசி மாதம் என்று நினைக்கிறன். சிவராத்திரி தினம் எமது கோயிலின் முன்னே சிவராத்திரி தினத்தைக் கொண்டாட ஊரே திரண்டிருந்தது. இரவு நித்திரை விழிப்புக்கு கலை நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

ஊர எமது கோயிலின் முன்னே கூடியிருக்க நானும் எனது நண்பனும் சைக்கிள் ஒன்றை எடுத்துக் கொண்டு கீரிமலைக்கு போய் வருவோம் எனறு வெளிக்கிட்டோம்.

கீரிமலையில் சிவராத்திரி என்றால் விசேடமான நிகழ்வுகள் நடக்கும் சிறப்பான கலை நிகழ்வுகள் இருககும் மக்களும் வருவர்கள். எங்கட ஊரிலை நடக்கிறதை விட இன்னொரு ஊரில் நடக்கிறதைப் பார்க்கத் தான் ஒவ்வொருவர் மனமும் விரும்புகின்றது.

இதே போலத்தான் நாங்களும் கீரிமலைக்கு போவதற்கு விரும்பினம்.

நாங்கள் கீரிமலைக்கு போறதுக்கு வெளிக்கிட்ட நேரம் இரவு பதினொருமணி. நல்ல இருட்டு ஒருத்தற்ற சைக்கிளிலும் லைட் இல்லை. நானும் நண்பனும் வெளிக்கிட்டதும், எமக்குப் பின்னால் இன்னும் சில நண்பர்கள் இரண்டு மூன்று சைக்கிள்களில் எங்களைப் பின் தொடர்ந்தனர்.

கீரிமலைக்குச் செல்லும் பாதையை ஞாபகப்படுத்திப் பார்க்கிறேன். காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை தனது சீமெந்து உற்பத்திக்காக தோண்டி எடுக்கின்ற கற்களால் பெரிய பள்ளங்கள் காணப்படுகின்ற இடங்களுக்கு அருகில் செல்லும் பாதையால் தான் நாங்கள் வழமையாக கீரிமலைக்குச் செல்வதுண்டு.

இரவு பதினொருமணி அப்போது இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொண்டிருந்த இந்த காலப்பகுதியில் மெயின் ரோட்டால் போறது ஆபத்துத்தான் எம்மை குறுக்கு வழியால் போகச் செய்தது.

எம்முடைய சைக்கிள்கள் ஊரின் எல்லையைத் தாண்டி சென்று கொண்டிருக்கின்றன. நாங்கள் இரவு நேரம் பயத்தைப் போக்கிக்கொள்ள பெரிதாகக் கதைத்துச் சிரித்தபடி சென்று கொண்டிருக்கின்றோம்.

திடீரென்று என்னுடைய சைக்கிளுக்கு முன்னால் சென்ற எனது நண்பனின் சைக்கிள் பிறேக்போட்டு நின்றது.

என்னுடைய சைக்கிள் அடுத்து பிறேக் அடித்தது. தொடர்நது எல்லோரது சைக்கிள்களும் பிறேக் அடித்து நின்றிருந்தன.

ஏன் நிற்கிறோம் என்று புரியாமல் நின்ற சைக்கிளில் இருந்து இறங்கி, முன்னே நண்பன் நிறுத்திய சைக்கிளின் அருகே சென்று பார்த்தோம்.

அனைவருக்கும் மனதில் தோன்றிய வியப்பும், அச்சமும், மகிழ்ச்சியும் என உணர்வுகள் மாறிமாறிக் கொண்டிருந்தன.

முதலில் சென்று பிரேக் அடித்தவன் என் நண்பன். அவனின் அந்த செயலால் எனது உயிர் பின்னே வந்த எனது நண்பர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டதை நினைத்தே எமக்கு அவ்வாறான உணர்வுகள் ஏற்பட்டன.

விடயம் இதுதான், நாங்கள் நின்று கொண்டிருந்த இடம் கீரிமலை சிவன் கோயிலுக்குச் செல்லும் குறுக்கு வழிப்பாதையை விலக்கிய இடம் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையினர் கற்களைத் தோண்டி எடுத்து, பெரும் பள்ளமாக்கிக் காட்சியளிக்கும் பள்ளத்தின் விளிம்பில் நிற்கின்றோம்.

பள்ளம் அதில் விழுந்தால் ஆளே காலி, சுமார் 20 அடி ஆழமுடையது அந்தப் பள்ளம். அதில் ஒரு முறை விழுவது போல கற்பனை பண்ணிப் பார்த்தோம். இப்பவும் உடல் புல்லரிக்கின்றது.

இந்த விபத்திலிருந்து தப்பிய அனுபவத்தை எண்ணியவனாக எத்தனையோ நினைவுகளில் இருந்தேன்.

15 வருடங்களுக்கு முன்னர் சந்தித்த அந்த நண்பனின் குரலைக் கேட்கும் ஆவல் என் மனதில் அடிக்கடி ஒலிக்கும் ரெலிபோன் மணியின் சத்தம் நண்பனின் குரலையும், எமது ஊரின் நினைவுகளையும் சிதறடித்துக் கொண்டிருந்தன.

தொலைத்தொடர்பு நிலைய உரிமையாளர் ரெலிபோனை எடுத்து என் பெயரைக் கூப்பிட்டு ரெலிபோனைத் தந்தார்.

நான் "ஹலோ" சொன்னதும், என் பெயரைக் கேட்ட உடனே, நண்பன் 'இந்த முறை சிவராத்திரிக்கு கீரிமலைக்குப் போவமா?' என்று கேட்டான்.

எனது ஊரை விட்டு இத்தனை ஆண்டுகளாகியும், யாழ்ப்பாணத்திலும், கனடாவிலும் நண்பர், நாங்கள் வாழ்கின்ற போதிலும் உணர்வுகள் ஊரின் நினைவுகள், ஒன்றாகி இருப்பதை எண்ணி அந்தக் கேள்வியால் மகிழ்ச்சியடைந்தேன்.

## இலக்கிய முத்து

# விதியைவிட ஒன்றுண்டோ



நம் கன்னித் தமிழ் வளர்த்த நற்றமிழ் புலவர்களிடம் நனி சிறந்து காணப்பட்ட புலமைக்கு அப்பால் வறுமையும் காணப்பட்டது. ஒரு சாண் வயிற்றை நிரப்புவதற்காக ஒரு மைல் தூரம் நடந்து இரந்து பாடிய இன்தமிழ்ப் புலவர்களும் உள்ளனர்.

ஆனால், வறுமை வந்துற்ற போதும் துலங்குதல் அறியா மனவன்மை உடைய புலவர்கள் குடிப்பது கூழாயினும் பாடுவதற்கு உரியவரை அன்றி மற்றோரைப் பாடா மனவைரம் உடையவர்கள்.

அவர்களில் இவரும் ஒரு புலவன். ஒட்டி உலர்ந்த உடலும், முகத்தில் எட்டிப்பார்க்கும் ஒரு சிறுதாடியும் அவனது வறுமையின் இயல்பினை எடுத்துரைத்தன.

சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும் ஒருவனை எவ்வாறெல்லாம் மாற்றிவிடுகின்றன. வறுமையால் வாடிய இப்புலவனும் ஆபத்துக்குப் பாவமில்லையென அந்தச் செயலுக்குத் துணிந்துவிட்டான்.

வறுமையில் வாடும் தன் குடும்பத்துக்காக களவெடுக்க வேண்டிய கட்டாய சூழலிற்கு சென்றுவிட்டான் அவன்.

அருந்தமிழப் புலவன் ஏதாவது திருடிக்கொள்வதற்காக சந்தர்ப்பம் பார்த்து அரண்மனை ஒன்றினுள் புகுந்துவிட்டான். பாவம் பழக்கமில்லாதவன், புகுந்தது மன்னனது மஞ்சத்து அறை.

புலவன் பொருளைத் தேடிக் கொண்டிருக்கும்போது விதி சதி செய்துவிட்டது. மன்னனும், மகாராணியும் மஞ்சத்துக்கு வந்துவிட்டார்கள். என்ன செய்வது வஞ்சமில்லா வண்டமிழ்ப் புலவன் மஞ்சத்தின் கீழே பதுங்கிவிட்டான்.

மன்னனும் மகாராணியும் மஞ்சத்தில் வந்தமர்ந்தார்கள்.

மஞ்சம் களைகட்டியது. இன்று வழமைக்கு மாறான ஒருவிடயமும் நடந்தேறியது. தமிழின்பால் தாழாத ஆர்வம் கொண்ட மன்னன் பாடலொன்றின் முதலிருவரிகளைப் பாடிவிட்டு தன் எழில் விஞ்சும் இளவரசியைப் பார்த்து மீதியைப் பாடும்படி பணிந்து நின்றான்.

கள்ளமறியா நற்றமிழ்ப் புலவன் களவெடுக்க வந்ததை மறந்து மஞ்சத்தின் கீழ் இருந்து மீதிப் பாடலைப்பாடிவிட்டான். பாவம் தொட்டிற்பழக்கம் என்ன செய்வது.

பாடலின் கருத்தில் தன்னை இழந்த மன்னன் வண்டமிழ்ப் புலவனின் நிலையறிந்து தன் களஞ்சியறைக்கு அழைத்துச் சென்றான். ஆயிரம் ஆயிரம் பெட்டிகள் அங்கே அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அனைத்தையும் காட்டிய அரசன் விரும்பிய ஒன்றை எடுத்துச் செல்க என பைந்தமிழ்ப் பாவலனிற்கு உத்தரவிட்டான்.

கொள்ளை மகிழ்ச்சியில் ஒரு பெட்டியை எடுத்துச் சென்ற புலவன் தன் வீட்டில் அதனைத் திறந்த போது உள்ளே இருந்தவை குப்பைகளும், கஞ்சல்களுமே.

உள்ளம் உடைந்த புலவன் தன் நிலைமையினை சொற்களால் கோர்த்து வருகின்றான்.

நாட்டில் உள்ள வயல் முழுவதும் செந்நெல் விளைந்தாலும், ஆறுகளெல்லாம் ஒன்பது வகை தானியங்களைத் தந்தாலும், காட்டில் உள்ள மரங்கள் காய்களுக்குப் பதிலாக உடைகளைத் தந்தாலும், மேகங்கள் பொன்னைப் பொழிந்தாலும், தில்லை வாழ் சிவன் அவரவர்கு என்று எழுதியதை விட வேறு ஏதுவும் நடக்குமோ? என தன்னிலைமையினை உடைத்துவிட்டான் அப்பாவலன்.

நாடெல்லாம் செந்நெல் விளை யினும்
நதியெல்லாம் நவமணிதரி னும்.
காடெல்லாம் ஆடை காய்க் கினும்.
மேகம் கனகமே பொழியினும்.
ஆடலே புரியும் அம்பலவா ணர் அவர்
அவர்க்கமைத்தது அல்லால்
வீடெல்லாம் புரண்டு அழினும் விதியலால்
வேறொன்றுளதோ.

(தனிப்பாடற்திரட்டு)

லெஸ்லி

# தமிழ்த்தாய் ஆதாமின் விலா எலும்பால் ஆனவளல்ல

கிரேக்க இலக்கியத்திலே சாபோ என்கிற ஒரே ஒரு பெண் கவிஞர் மட்டுமே கி.மு 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் தமிழிலோ கிட்டத்தட்ட 41 பெண் கவிஞர்களின் கவிதைகள் சங்க இலக்கியத்தில் கிடைக்கின்றன.

59 கவிதைகளைச் சங்ககால ஔவையும், 13 கவிதைகள் வெள்ளி வீதியாரும் எழுதியதாகப் பதிவாகியுள்ளது. காலத்தில் எங்கெங்கோ கைமாறித் தொலைந்ததுபோக, மீதியாகக் கிடைத்தவை 59 கவிதைகள் என கணக்கில் கொள்ளப்பட்டால் ஔவை எத்தனை நூறு கவிதைகளை எழுதியிருப்பார்? இலக்கியப் படைப்பாற்றல்கள் ஆண்களுக்கு உரியது. அறிவு மயமானவன் ஆண், உணர்ச்சிமயமானவள் பெண் என்ற கருத்தாக்கங்கள் அன்றே தகர்ந்து போயிருக்கின்றது.



2000 ஆம் ஆண்டுகளுக்கு முன்பே பெண்கள் அறிவுஜீவிகளாகத் தங்களை முன்னிறுத்தி வாழ்ந்துள்ளனர்.

திருக்குறள் தொடங்கி, சங்ககாலம் மற்றும் பக்தி இலக்கியப் பிரதிகள் வரை மனித வாழ்வின் காதலையும் கடமையையும் மையமாக வைதது கவிதைகள் பாடப்பட்டுள்ளன. இதனூடாக இயற்கையும் பக்தியும் ஊடுருவிக் கடந்து செல்கின்றன. அறத்தையும் பொருளையும் பேசும் திருவள்ளுவர் காமத்தையும் ஒரு பகுதியாக ஏன் இயற்றினார்? ஊடல், உணர்தல், புணர்தல் இவை காமம் கூடியார் பெற்ற பயன் (குறள் 1109) கடா, அக்களிற்றின் மேல் கட்படாம் மாதர், படா அமுலை மேல் துவில் (குறள் 1087) ஆண், பெண கூடலையும் கூடல் இன்பத்தையும் உடல் வர்ணனைகளையும் இருபால் உடல்களும் ஏற்றத் தாழ்வின்றி உறவின்பத்தை அடைதல் பற்றியும் ஏன் இக்குறள்கள் பேசவேண்டும்? அடுத்து வீரத்தையும், மன்னனையும் நாட்டையும் பாடும் சங்ககாலக் கவிகள் ஏன் காதலைச் சொல்லவரும்போது உடலுறுப்புக்களை வலிந்து எழுதினார்கள் தெரியவில்லை. ஆனால் இதெல்லாம் பழங்கதை இந்த நூற்றாண்டில் யார் இப்படியெல்லாம் எழுதுவது இவை மறைவு காய் போல மறைவாகத்தான் பேசவேண்டும். நாம் நாகரீக மனிதர்கள்.

பெண் எப்போதும் ஆதாம் விலா எலும்பிலிருந்துதான் உருவாகமுடியும் என்ற நம்பிக்கை உடையவர்களுக்கு தமிழ் அறிவியலும் தமிழ் இலக்கியமும் தெரியவாய்ப்பில்லை. சங்ககாலத்தில் தனியொரு மகா கவியாக ஔவை விளங்குகிறார்.மூத்த திருப்பதிகங்களைக் காரைக்கால் புனிதவதி உருவாக்கிறார். ஸ்ரீ வல்லி புத்தூர் ஆண்டாளோ நவீனத் தமிழ்க் கவிதைக்கான சொல்லடுக்குகளை அன்றே உருவாக்கத் தொடங்கிவிட்டாள். தன்னை பெண்பேய் என்று கூறிக்கொண்ட காரைக்காலம்மை ஒரு மகத்தான கவித்துவ எழுச்சி ஆவாள். இப்படியான கவிதை மனம்கொண்ட மகாகவிகள் தமிழிலக்கியத்தில் ஏன் அனுப்பப்பட்டது. பக்தி இலக்கியத்திற்குப் பிறகு பல நூற்றாண்டுகள் இலக்கிய வரலாற்றில் பெண் பதிவாகவில்லை. இக்காலகட்டம் பெண் கவிகளின் தலை மறைவுக்காலமாக உள்ளது. இதன் வரலாற்று சமூகக் காரணிகள் ஆய்வு செய்யப்படவேண்டும்.

மிக நீண்ட வரலாற்று இடைவெளிக்குப் பிறகு மீண்டும் பெண்கவிகள் தங்கள் மொழியை உருவாக்கத் தொடங்கிவிட்டார்கள். இதில் இது ஆபாசம் எனப்பேசப் தமிழ் இலக்கியம் உங்களை எங்குமே அனுமதிக்காது. ஏனெனில் தமிழ்த்தாய் ஆதாமின் விலா வெலும்பால் ஆனவளல்ல.

**- மாலதி மைதிலி**

அவள் மூக்கு நீளம் சற்றே குறைந்திருந்தாலும், முழு உலகத்தின் முகமே மாறிப்போயிருக்கும் என்று வரலாற்று எழுதிகளால் வர்ணிக்கப்பட்டவள்தான் கிளியோபட்ரா. மாவீரன் ஹெர்குலிசின் சந்ததியில் வந்த மார்க் அன்ரனி தனக்கு எதிரான போரில் புருட்டசுடனும், காசியசுடனும் கைகோர்த்துக்கொண்டாள் கிளியோபட்ரா என்பதற்காக அவளை விசாரிக்கப் புறப்பட்டுப்போனான். ஆனால் சிட்மஸ் நதியில் சித்திரப்படகில் அழகுத் தெய்வம் வீனஸ் வடிவில் வந்த கிளியோபட்ராவின் கண்கள் விசாரணையில் அவன் கதை மாறிப்போயிற்று.

சேக்ஸ்பியரின் நாடகத்தில் - அவன்தான் அவருடைய கவிதைகளுக்கு அழகியல் ஆலாபனையைக் கற்றுக்கொடுத்தாள். நீல நதியின் அலைகளும், அவளுடைய நட்சத்திர இரவுகளும் - காதல் மயக்கத்தில் கனிந்த காற்றும் சேக்ஸ்பியரின் வார்த்தைகளுக்குச் சாகாவரம் தந்துள்ளன.



"அன்ரனி கிளியோபட்ராவும்", நாடகத்தின் ரத்த யுத்தமும், முத்த யுத்தமும் மோதித் தெறிக்கும் காட்சிகள் கால வெளியில் நித்தியப்பட்டுவிட்டன.

மார்க்அன்ரனி நண்பன் எனோபார்பஸ் கிளியோபட்ராவைப் பற்றி

## அன்ரனி கிளியோபட்ரா

வர்ணிக்கும் இடம் - மறக்கமுடியாத காவியச்சுவையைக் நிரப்பிக் கொண்டிருக்கிறது.

'காலத்தால் அவள் கோலம் சிதையாது!
பழகப் பழக அவன் மோகம் புளிக்காது.
காதல் சுவையின் கரை கண்டவள் தம்மைப்
பசிக்கும் பரிமாறும் மற்றப்பாவையர்கள்.
தெவிட்டிப் போவார்கள்,
ஆனால் கிளியோபட்ரா
பசியைத் தீர்க்கும் போதே
தீராதபடி அதை வளர்த்துக் கொண்டு போகிறவள்,

அன்ரனியின் இறுதி மூச்சு அவள் கண்ணீரில் கரைந்த பின், அவள் தன் மரணத்துக்கு அவசர அழைப்பு விடுத்தாள். அத்திப்பழக்கூடையில் கொண்டுவரப்பட்ட பாம்புகளில் ஒன்றைத் தனது மார்பின் மீது எடுத்து விடுகிறாள் கிளியோபட்ரா. அதைப் பார்த்துப் பதைபதைக்கிறாள் பணிப்பெண் சார்மியான். ஓ! கீழ்த்திசை நட்சத்திரமே என்று அமுது ஆற்றும் அவளிடம் கிளியோபட்ரா சொல்கிறாள்.

'அமைதியாய் இரு! அமைதியாய் இரு!
என்குழந்தை என் மார்பில் கிடப்பதைப் பார்க்கவில்லையா நீ!
அது தாயைத் தூங்க வைக்கப் பால் குடிக்கிறது' சேக்ஸ்பியரின் கரையும் கவிதை மொழியிலேயே சோகத்தை நாமும் அனுபவிப் போமே....!

**- தமிழன்பன்.**

## இன்னும்...



கூடு சிதற
தப்பிச் சிறகடித்த
ஊர்க் குருவிகளின் காதில்,
தென் சீமைக்காற்று
வசந்தம் வருவதாக
சொல்லிச் சென்றது.
தெருக்களில்
வெட்டிய நீற்றுக்காயும்
எரிந்த வைக்கற் பொம்மைகளும்
வரிசையிட்டு ஊரில்
மகிழ்வு ப்ப்பதாய்
கட்டியம் சொல்லின
ஆனாலும்
முகாமின்
ஓட்டைக் குடிசைக்குள்
உள்ளங்கள்
துயரோடு இன்னும்
துயில்கின்றன.

**யோ.சி.கலைக்கதிர்.**

## அந்த::: நாள்::: எங்கே:::

நான்...நிமிர்ந்துகொண்டேன்
காலம் ....காலமாய்
இந்த
மண்ணில்...மக்களின்
துயரில்...பங்கு கொண்ட
நான்............
என்......மண்ணில்
நிமிர்ந்தபோது
என்.....பார்வை
இந்த கடல்.....வெளியில்
பதிந்து.......மன
உணர்வுகளை......பகிர்ந்து
கொள்ளத் துடிக்கின்றது
என் முன்னே
பரந்த விரிந்த....அந்த
அழகிய
ஆலமரம்...அதில் அமர்ந்த
கொஞ்சிக்.....குலாவும்
பறவையினங்கள்
என் நேரமும்....மாதா
கோவிலில்
கூடி....பிரார்த்திக்கும்
அந்த மனிதர்களின்
இறைவனிடம்...இறைஞ்சும்
குரல்கள்
முற்றவெளி
மைதானத்தில்
தம்மை மறந்து
விளையாடும்
அந்த...சின்னஞ் சிறுசுகள்
எங்கே ....போனார்கள்
இவர்கள்.....எங்கே
நான் இந்த...மண்ணில்
எப்போதோ...தோன்றினேன்
என் நினைவு தெரிந்த
நாளிலிருந்து
அந்த மக்களின் துயரில்
என்னையும்....இணைத்துக்
கொண்டேன்
நான்...ஓயாத அலையில்
நிலை...குலைந்தபோது
நீலக்கடல்...வெளி
யனித..இரத்தத்தில்..சங்கமித்து
தன்னை....இழந்தது
கரைதேடும்....ஓடங்களாய்
வங்காள விரிகுடா........
கடற்...கரும்புலிகளின்...ஈகத்தில்
தன்னை.....மறந்த
அந்த.....வேளை
நான்.....மட்டும்
அவர்களின்....அந்த பூ
முகங்களை
காணத்துடிக்கின்றேன்.
அந்த...நாள்....
எங்கே! எங்கே....

**- ரமணன்**

## உயிராஞ்சலி

### - உரைநடை

உன் கருவறையில் தீபங்கள் ஒளிர்கின்றன.
தீப ஒளியில் உன் வதனங்காணும் ஆவல் என்னுள் கிளைத்து வளர்கிறது.
உனது முகம் தெரியவேயில்லை.
விகசித்து விகசித்து ஒளிரும் உன் வதனத்தை எதற்காக நீ மறைக்கிறாய்.....?
கண்ணை மூடி அமர்கிறேன். கண்களுக்குள் உன் தீப ஒளி கோடி ஜாஜ்வல்யமாய் ஒளிர்கிறது. அதில் உன் புன்னகை தெரிகிறது. எனக்குள் உன் விஸ்பரூபம் வளர்கிறது.

கண் திறக்கிறேன். ஒரே இருட்டு வெளியில், முன்தோன்றிய உன் முகத்தில் இருட்டுப் படர்ந்திருக்கிறது.
நீயா இப்படி இருட்டானாய்.....? உன்முன் ஒளிர்ந்த சுடர் என்னவாயிற்று?
நீதானா அது......
என் மீதே நம்பிக்கையற்றுத் தளர்ந்து போகின்றேன.

கண்மூடுகின்றபோது சுடரின் பிரகாசம் கண்ணைப் பறிக்கிறது.
கண் திறக்கிறபோது இருட்டுள் உன்முகம் கரைந்து விடுகிறது.
கண்ணை மூடி உன்னைப்பார்ப்பது சுகமாயிருக்கிறது.
வெளியே இருள்.... உள்ளே ஒளி... இதை நீ மட்டும்தான்
சாத்தியப்படுத்தியிருக்கிறாய் எனக்கு........

இல்லாத 'ஒன்றை' நான் கனவு காண்பதாய் உலகம் என்னை எச்சரிக்கை செய்கிறது.
நினைவின் தழும்புகள் அடிக்கடி துன்புறுத்தப் பார்க்கின்றன.
ஏழு கடல்களுக்கு அப்பாலிருந்து உனது குரல் கேட்கிறது......
உயர்ந்த மலைகளுக்கு அப்பாலிருந்து கேட்கிறது.
அடர்ந்த காடுகளுக்கு அப்பாலிருந்து கேட்கிறது.
உனது குரல் ஆழ்ந்த அமைதியை ஊடுருவி வருகிறது......
அலைகளின் இரைச்சல்
ஊடறுத்து வருகிறது.......

ஒருபுறமாய் மனதைப் பரவசமாக்குகிறது.
மறுபுறத்தில் வேதனையைப் பரிசளித்துப் போகிறது.
உனது குரல் நாதமணியிசையாய் மனதை வருடுகிறது.
உடைந்து நொறுங்கும் கண்ணாடிச் சிற்பத்தின் ஓசையாய் உயிரைக் கீறுகிறது.

நான் மௌனத்துக்கடியில் என் சொற்களைப்
பத்திரமாய்ப் புதைத்து வைத்திருந்தேன்.......
ஒவ்வொன்றாய்ப் புதையல் எடுக்க முயல்கையில்...
உன் காதுகளைப் பொத்திக் கொள்கிறாய்......?
இதுவரை பத்திரமாய் புதைத்து வைத்த சொற்கள் இனி யாருக்காக......?
கண்ணீர்த் துளிகள் எனைச் சுற்றி இறுக்கும் கயிறுகளாகி விட்டன.

உன்னை எப்படி அணுகுவதென்பது தெரியவேயில்லை......
மௌனம் சுக்கல்களாகி, வார்த்தைகள் பீறிடுகையில் நீ மௌனமாகி விடுகிறாய்......

வார்த்தைகளுக்கடியில் சிக்கிக்
களைத்து மௌனமாய்
மீள்கையில் நீ என் வார்த்தைகளை
எங்கெங்கோ தேடுகிறாய்......!



ஒரு கையில் கத்தியோடும், மறுகையில்
மருந்தோடும் வந்து கொண்டிருக்கிறாய்.....
நானும் தான் அறியாப் பொழுதில்
கத்தி வீசியிருக்கிறேன்.
எனினும் கொட்டுண்ட குருதி கண்டு
கலங்கி
அதற்கு மேலும் கத்தி வீசக்
கூடாதெனக்,
கட்டுப் போட்டிருக்கிறேன் காயத்
திற்கு.
நீ கத்தியோடு வருகிறாய்......
செய்த தப்பிற்கு தண்டனை தரப்
போகிறாயா....?
நீ கத்தியோடு வருகிறாய்..... வெட்
டுண்ட இடத்தில் குருதி கசிகிறது.

உன் மருந்தை மட்டும் ஏன் ஒழித்து
வைத்துக் கொண்டிருக்கிறாய் இன்னும்.....
எனக்குத் தெரியும் உனது மறுகரத்தில் நீ, பஞ்சும் மருந்தும் வைத்துக் கொண்டுதானிருக்கிறாய்.......
துடித்துப் பதைக்கும் இந்த வலி கண்டும் ஏன் இன்னும் இளகாதிருககிறாய்......?
அவ்வளவு இரக்கமற்ற நீ இருக்கக்கூடும் என்று இன்னும்தான் இந்தமனம் நம்பவில்லை.

உனது 'கருணை'க்கு ஏங்குகிறது மனம்.
உனது. 'தரிசனங்' காணத் துடிக்கின்றன கண்கள்.
உனது 'உண்மையின் குரல்' கேட்கத் தவிக்கின்றன செவிகள்.
நீ மட்டும் இருட்டுள் இருட்டாகவே உறைந்திருக்கிறாய்.
உன் முகங்காட்ட மறுக்கிறாய்.
உன் குரலை அந்நியமாக்குகிறாய்.

இலக்கில்லாமல் அலைந்தேன்.
எது 'மெய்ப்பொருள்' எனப் புரியாமல், கண்டவற்றுளெல்லாம் தேடினேன்.
என்னை உன்திசை நோக்கி ஈர்த்தாய்.
எங்கெங்கோ நீயிருந்தாய்.
நீ இருக்கும் இடங்களெல்லாம் தேடி வந்தேன்.
இருக்குமிடங்களிலெல்லாம் மாயமாய், மறைந்து
மறைந்து ஒளிர்ந்தாய்.

அழுது கொண்டு உன் சந்நிதிக்கு வந்த போது
அருளூறிப் புன்னகைத்தாய்....
உனக்குள்ளா 'அருள்'வீசிற்று என்பது தெரியாதபடி
கல்லாய் இறுகியுமிருந்தாய்....
நீ சிரித்தாலும், வெறுதாலும் உனைத்தேடி வந்துகொண்டுதானிருந்தேன்.

(தொடரும்..)

**- தாட்சாயணி**

சர்வதேச அரசியல்

கே.ரி.கணேசலிங்கம்

# ஆர்மிரேஜின் விஜயத்திற்கு பின்னால் இருக்கும் அரசியல்



அமெரிக்க பிரதி ராஜாங்கச் செயலர் றிச்சர்ட் ஆர்மிரேஜின் இந்திய வருகை விமர்சிக்கவும், மதிப்பீடு செய்ய வேண்டியதுமான அரசியலாகும். இது அவரது முதலாவது விஜயமல்ல. தென்னாசியப் பிராந்தியத்தில் அமெரிக்காவுக்கும் அதன் நலன் சார்ந்த கொள்கை வகுப்பாளர்களுக்கும் நெருக்கடி உருவாகும்போது அவரது விஜயம் நிகழும். சில சந்தர்ப்பங்களில் நெருக்கடியாகவும் அமையும். அதேவேளை சாதகமான கொள்கைகளை வகுப்பதற்கான நடவடிக்கையாகவும் ஆர்மிரேஜின் விஜயம் நிகழும். அவ்வாறே தமது நலனுக்குள் உட்பட்டிருக்கும் தென்னாசிய அரசியல் தலைமைகளுக்கு நெருக்கடி ஏற்படும்போது இவ்வகையான விஜயங்களை மேற்கொள்வார். ஆர்மிரேஜின் இந்திய - பாகிஸ்தான் விஜயத்தின் பின்னாலுள்ள அரசியலை விரிவாக நோக்குவோம்.

முதலில் ஆர்மிரேஜின் விஜயம் நிகழ்ந்த போதுள்ள தென்னாசியச் சூழலை விளங்கிக் கொள்வோம். இலங்கையிலும் இந்தியாவிலும் ஆட்சி மாற்றம் நிகழ்ந்ததுடன் இலங்கையை விட அமெரிக்க எதிர்ப்பை அதிகம் வெளியிடும் இந்தியத்தரப்பின் வலுவான திட்டமிடல்கள் ஆரம்பமாகியிருந்தன. இடதுசாரிகள் அமெரிக்க ஆக்கிரமிப்பையும், அதன் அரசியல் தலைமையையும் மிக மோசமாகக் கொச்சைப்படுத்தும் அரசியலை நிகழ்த்தி வருவதுடன் பொருளாதார சீர்மைப்புக்களை புத்திபூர்வமாக மேற்கொள்ள வேண்டிய சூழலை ஆளும தரப்புக்கு கொடுத்து வருகினறனர். இவ்வாறு அரசியல் பொருளாதார ரீதியில் அமெரிக்க எதிர்ப்பை கிளப்பிவரும் பிராந்தியச் சூழலில் ஆர்மிரேஜின் விஜயம் நிகழ்ந்துள்ளது.

இன்னோர் ஆபத்தான அரசியலும் தென்னாசியாவுக்குள் நிகழ்ந்து வருகின்றது. இந்தியா-பாகிஸ்தான் இரண்டு நாடுகளும் சமாதானப் பேச்சுக்களை கூட்டாக ஆரம்பித்திருப்பதுடன் அமெரிக்கத்தரப்பின் ஆலோசனை இன்றி இந்தியத் தரப்பு ஈடுபட்டுவருவதும் அமெரிக்காவுக்கு கசப்பானதாக அமைந்திருக்கும்.

மேலும், இலங்கை இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வு இடைநடுவில் முறிந்துள்ளது. இது மட்டுமன்றி சமாதான பூர்வமான அணுகு முறைப் படிப்படியாகக் குலைந்து போருக்கான முனைப்பு வலுப்படுத்தப்படுகின்றது. இதில் அமெரிக்காவின் பங்கு எவ்வளவு காணப்படுகின்றதோ அதை விட அதிகமான பங்கு இந்தியாவுக்குமுண்டு.

எனவே இந்தியாவை வளைத்துப் போட வேண்டிய தேவைகள் அமெரிக்காவுக்கு அதிகமாகக் காணப்படுவதென்பது புலனாகின்றது. ஏற்கனவே காணப்பட்டது போலல்லாது அமெரிக்கா மெதுவாக பதுங்குவது போலவே தென்படுகின்றது. ஏனெனில் ஏற்கனவே அமெரிக்கா மிரட்டுவது, அச்சுறுத்துவது, தடைகளை விதிப்பது எனப் பல அணுகுமுறைகளை இந்தியா பொறுத்துப் பின்பற்றி வந்தது. ஆனால் தற்போது இந்தியத் தரப்பு ராஜீவ் காந்திகாலக் கொள்கைக்கும், வடிவத்திற்குள்ளும் இருப்பது போல்காட்டப்படுகின்றது. மன்மோகன்சிங் ஒரு பொருளாதார வல்லுனர் மட்டுமே. அவரது அரசியற்பக்கம் வெறுமையானது என்பதோடு இத்தாலியப் பெண் தான் அதை நிரப்பவேண்டியிருக்கிறது என்பது கவனிக்க வேண்டியது. அதாவது அமெரிக்கத் தரப்பு இந்தியாவின் முதுகில் குத்துவதற்கு தயாராகிவிட்டது என்பதையே அவதானமாகக் கொள்ள வேண்டியிருக்கிறது. இது அணைத்துக் கொடுக்கும் கொள்கையாகும். இது அமெரிக்கர்களுக்கு சாதாரணமானதும் பரீட்சயமானதுமாகும். இக் கொள்கையை எப்படிக் கண்டறிவதென்பதே அடுத்த கேள்வியாகும். அதனை விரிவாக அவதானிப்போம்.

இந்தியாவுக்கு ஆர்மிரேஜ் வருகை தரும் காலத்தில் ஜோர்ஜ் பெர்னாண்டஸின் நிர்வாண அரசியல் பிரபலமான காலம். இந்தியாவின் முன்னாள் பாதுகாப்பமைச்சரும், அமெரிக்க விரோதியுமான பெர்னாண்டஸ் ஓர் இடதுசாரி என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆர்மிரேஜ் நிர்வாண அரசியலுக்கு மன்னிப்புக் கேட்டார் என்பது இடதுசாரிகளைக் கேட்டதற்குச சமனானதாகும். அமெரிக்க எதிர்ப்பை அதிகமாக க்கும் இடதுசாரிகளுடன் அமெரிக்கா இசைந்து போகவே விரும்புகின்றது என்பதை ஆர்மிரேஜ் வெளிப்படுத்தியுள்ளார். ஏனெனில் இந்தியாவை விரோதித்துவிட்டோ, விலத்திவிட்டோ அமெரிக்கப் பொருளாதாரத்தைப் பாதுகாக்க முடியாது. அவ்வாறே இடதுசாரிகளைப் பகைத்துக் கொள்ளமுடியாத அளவுக்கு ஆளும். தரப்பில் ஆதிக்க முடையவர்களாக காணப்படுகின்றனர். எனவே பணிந்து விடயத்தைச் சாதிப்பதே அவரது பிரதான நோக்கமாகப் புலப்பட்டது. பாரதீய ஜனதா ஆட்சியிலிருக்கும்போது, இவ்வாறு எந்த அணுகுமுறையுமின்றி அமெரிக்கர்கள் வருவார்கள் போவார்கள். ஆனால், இப்போது நிகழ்ந்த விஜயம் தந்திரமாக, புத்தி பூர்வமாகத் திட்டமிட்டு மேற்கொளளப்பட்டுள்ளது.

இரண்டாவது அம்சமாக அமைந்திருந்தது ஈராக் விவகாரம். ஈராக்குக்கு இந்தியப்படைகளை அனுப்ப வேண்டுமென அமெரிக்கா கோரவில்லை என ஆர்மிரேஜ் பகிரங்கமாக அறிவித்தார். ஈராக்குக்கு படையனுப்பும் விடயம் அமெரிக்காவில் தொடங்கி இந்திய நாடாளுமன்றம் வரையும் வந்துவிட்டது. இதனால், இந்திய வெளிவிவகாரத்துறை நெருக்கடியை அடைந்ததுடன், இந்திய ஆளும் தரப்பு நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் நிலையும் ஏற்பட்டது. எனவே ஆட்சியாளரைப் பாதுகாப்பதுடன் அமெரிக்க-இந்திய உறவையும் பேணுதல் ஆர்மிரேஜின் கடமையாகவிருந்தது. இந்திய ஆளும் தரப்பில் இரு பிரிவுகள் காணப்படுகின்றது. ஒன்று இடதுசாரிகள், இரண்டாவது சமூக முதலாளித்துவவாதிகள். இவர்கள் இரு பிரிவுக்கும் இடையில் ஓர் "ஒளித்துப் பிடித்தல் அரசியல்" நிகழ்ந்து வருகிறது. அமெரிக்கச் சார்புப் பிரிவினர் முன் வைப்பதை பகிரங்கப்படுத்தி ஆபத்தான அரசியலுக்குள் தள்ளமுயலும் இடதுசாரிகளின் போக்கு, அமெரிக்க எதிர்ப்புவாதமாகவே அமைந்துள்ளது. இதனால் ஆர்மிரேஜ் தனது அமெரிக்கச்சார்பு இந்திய ஆளும்தரப்பு நண்பர்களை பாதுகாப்பதற்காகவும் தனது விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

மூன்றாவது அரசியல்- பாகிஸ்தானை ஆர்மிரேஜ் இந்தியாவிலிருந்து கண்டித்தது மட்டுமல்லாது பாகிஸ்தானிலும் அவ்விடயங்களை முதன்மைப்படுத்த விரும்பியிருந்தார் என்பதாகும். அல்கொய்டாவைச் சேர்ந்தோரைக் கைது செய்வது, தாக்குதல் நிகழ்த்துவது போன்று தலிபான்கள் மீது நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமெனக் கூறியிருந்தார். அவ்வாறே காஷ்மீர், ஹிமாசசலயப் பிரதேசங்களுக்குள் கிளர்ச்சியாளர்கள் ஊடுருவலைப் பாகிஸ்தான் முற்றாகத் தடுக்கவில்லை எனக் கூறியதுடன், பாகிஸ்தான் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கோரியிருந்தார். இது இந்தியத் தரப்பை சமாதானப்படுத்த எடுத்த முயற்சி என்பது தெளிவாகப் புலப்பட்டது. இரு நாடுகளது பேச்சுக் களையும் ஆதரரித்த ஆர்மிரேஜ்- அதனை பாகிஸ்தானியருக்கான பாராட்டாகவே வெளிப்படுத்தினார்.

இந்தியாவின் எல்லை கடந்த பயங்கரவாதம் பற்றிய சர்ச்சையை ஆதரிக்க ஆர்மிரேஜ் இந்தியத்தரப்பை அமெரிக்கா பக்கம் இழுப்பதில் ஆர்வமாகவே இருந்தார். வழமைக்கு மாறான அணுகுமுறை இந்தியத்தரப்பில் ஏற்பட்டு வரும் மாற்றத்தை உடைப்பதே அமெரிக்கர்களின் நோக்கமாகும். அரசியலை ஒரு பக்கம் ஒதுக்கிவிட்டு, பொருளாதாரத்தில் கவனம் எடுக்க விரும்பும் இந்தியத்தரப்பை அரசியலுடன் இணைக்க வேண்டுமென அமெரிக்கத்தரப்பு விரும்புகிறது. இதனால் அரசியற் பிரச்சினைகளைக்கிளறிவிட்டு அதற்குள் ஏற்படும் அபாயத்துக்குள் இந்தியாவைத்தள்ளிவிடுவதே அமெரிக்கத்தரப்பின் திட்டங்களாகும்.

ஆனால், ஆர்மிரேஜ் பாகிஸ்தானைச் சாடினாலும், விமர்சித்தாலும் உயரதிகாரிகளுடனான சந்திப்பின்போது உலகப் பயங்கரவாதத்திற்கு எதிராக பாகிஸ் தான் போராட்டத்தில் குதிக்க வேண்டும் எனக் கேட்டிருந்தார். இதன் மறுபக்கம், இந்தியாவின் பங்களிப்பின்றிய ஈராக்விடயத்தில் பாகிஸ்தானைச் சேர்த்துக் கொள்வதென்பதாகும். இந்தியா வுக்குப் பதிலாக உலக மட்டத்தில் பாகிஸ்தானைப் பாதுகாப்பதும், முதன்மைப்படுத்துவதுமே அமெரிக்காவின் நடவடிக்கையாக உள் ளது. ஐக்கிய நாடுகள் சபையின் ஈராக் தூதுவராக ஒரு பாகிஸ்தானியரை நியமித்துள்ளதென்ப தும், அதன் அணுகுமுறையை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. அதாவது பாகிஸ்தானைப் பயன்படுத்தி இந்தியவை வழிக்குக் கொண்டுவரும் கொள்கையை ஆர்மிரேஜ் கையாண்டுள்ளார். இந்தியாவுக்குரிய சலுகைகளை பாகிஸ்தானுக்குக் கொடுக்கமுயலும் போது அடிப்படை முரண்பாடு கூர்மையடையும். அரசியல் ஒரு பக்கம் காணப்பட்டாலும், போட்டித் தன்மை இந்தியர்களைப் பாதிக்கும் விடயமாக அமையும். அப்போது இந்தியர்கள் அமெரிக்கப் பொருளாதார அரசியற் கொள்கையுடன் இசைவார்கள் என்பதே இதன் பிரதான நோக்க மாகும்.

தென்னாசியாவுக்குள் இந்தியாவைத் தனிமைப்படுத்தினால் அமெரிக்க ஆதிக்கம் இலகுவாக வெற்றியடையும். அதனை உணர்ந்துள்ள விஜயமாகவே ஆர்மிரேஜின் தென்னாசிய விஜயம் அமைந்துள்ளது. ஏற்கனவே இந்தியாவுடன் நட்பைப் பேணிவந்த நேபாளத்தையும், எதிரியான வங்காளதேசத்தையும் அமெரிக்கா நெருங்கிவிட்டது. இலங்கை விரிவான நெருக்கத்துக்குள் அகப்பட்டுள்ள நாடாகவுள்ளது. இவற்றின் மூலம் இந்தியாவைத் தன்மைப்படுத்தலாம் என்பதே அமெரிக்காவின் அணுகு முறையாகும்.

குறிப்பாக காங்கிரஸ் கூட்டணி



கொண்டிருக்கும் அமெரிக்க எதிர்ப்பை முறியடிக்க இதுவே சிறந்த மார்க்கமென அமெரிக்கத்தரப்புக் கருதுகின்றது. பொருளாதார அடிப்படையிலேயே புதிய அரசாங்கம் கொண்டிருக்கின்ற கொள்கைகள் பெரும் ஆபத்தை அமெரிக்கத்தரப்புக்கு ஏற்படுத்தக் கூடியது. இந்த அரசாங்கம் ஐந்து வருடத்திற்கு நிலைத்திருக்குமாயின் அமெரிக்கப் பொருளாதாரத்தின் பாதிப்பு அதிகமாகும். அமெரிக்காவின் பொருளாதாரம் பின்தங்கிய நாடுகளிலேயே தங்கியுள்ளது என்பது, இதே பந்தியில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால், இந்தியச் சந்தை, முதலீடு, உற்பத்தி என்பன பாதிக்குமாயின் அது அமெரிக்காவுக்கு ஆபத்தானது. எனவே இந்தியாவை அணைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் அமெரிக்காவுக்கு உண்டு.

தனித்து பொருளாதாரத்தோடு மட்டும் அமெரிக்காவுடனான அபாயம் நின்றுவிடாது. அமெரிக்காவின் உலகளாவிய அமெரிக்க அரசியல்-இராணுவக் கொள்கைக்கும் ஆபத்து ஏற்பட்டுவிட்டது. இந்த ஆபத்தை தடுக்க அல்லது ஆபத்திலிருந்து மீண்டுவர இந்தியத் தரப்பின் ஒத்துழைப்பில்லாது விட்டாலும், எதிர்ப்பு ஏற்படாது தவிர்க்க வேண்டும். இந்தியத் எதிர்ப்பு அனுபவம் உலகத்தின் எதிர்ப்பாகவும், அனுபவமாகவும் மாறிவிடும். அதனால் இந்தியாவில் ஏற்பட்டுள்ள எதிர்ப்பை முறியடிக்க வேண்டுமென்பதே அமெரிக் காவின அடிப்படை உபாயமாகும்.

ஈராக்கின்- அமெரிக்காவின் இராணுவக்கொள்கையில் ஒவ்வொரு நாடுகளும் விலக அமெரிக்கா புதிய நாடுகளை இணைத்து வருகின்றது. பிலிப்பைன்ஸுக்குப் பதிலாக பாகிஸ்தானைச் சேர்த்துக்கொள்ள அமெரிக்கா முயலலாம். இது பகிஸ்தான் தரப்புக்கு இலாபகரமானதாகவே அமையும்.

இந்தியத்தரப்பே அதிக அபாயமெனக் கருதுகின்றதே அன்றி ஏனைய அரசுகளுக்கு அது அதிகம் பாதிப்பானதல்ல. ஆனால் காஷ்மீர் பிணக்குகளில் அமெரிக்காவின் தலையீட்டினை இந்தியத்தரப்பு தவிர்த்தாலும் பாகிஸ்தான் தரப்பின் அணுகு முறையால் இந்தியா நெருக்கடியை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும்.

எனவே, ஆர்மிரேஜின் விஜயம் அரசியல், பொருளாதார, இராணுவ உயர் நோக்கங்களைக் கொண்டது. இதற்கு இந்தியத்தரப்பு அதிக எச்சரிக்கை கொண்டதாகத் தெரியவில்லை. தென்னாசியாவுக்குள் இந்தியாவே அமெரிக்காவின் பிரதான இலக்காகும்.

முரண்பாடுகளை அதிகரித்து நெருக்கடிகளை வழங்கி இந்தியத் தரப்பை அடிபணியவைப்பதே அமெரிக்கா முன்னெடுத்து வரும் அரசியலாகும். இவ்வகை உள்நோக்கங்களைப் புரிந்து கொண்டு தீர்மானங்களை எடுப்பதும், நடவடிக்கைகளை ஆரம்பிப்பதும் தென்னாசிய அரசியல் தலைமைகளுக்கு சாதகமான விளைவைத்தரும்.



நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு
பகைநட்புஆம் காலம் வருங்கால் முகம்நட்டு
அகநட்பு ஒரீஇ விடல்
திருக்குறள்

# நமது நோக்கு

## அதிகரிக்கும் அயலக உறவு

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இந்தியாவுக்கான விஜயம் முன்கூட்டியே திட்டமிடப்பட்டதாக கூறப்பட்டாலும் - இப்போதைய சூழ்நிலையில் முக்கியத்துவம் மிக்கதாகவே அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகிறது.

இந்த விஜயத்தின் முக்கிய நோக்கம் - இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் பங்கை வலுப்படுத்துவதேயெனக் கூறப்படுகிறது.

இலங்கை விவகாரத்தில் மூக்கை நுழைக்கும் போக்கைக் கடைப்பிடித்த இந்தியா, கடந்த ஒரு தசாப்தத்துக்கும் மேலாக - சற்று விலகிய போக்கைக் கடைப்பிடிக்கிறது.

விலகிநிற்கும் போக்கு என்றவுடன் - வெறுப்போடு ஒதுங்கி நிற்கிறது என்று நினைத்துவிட்டால் அது தவறானது. பூனை கண்ணை மூடிக்கொண்டு பாலைக் குடித்த கதையாக - இந்தியா, தான் கண்ணை மூடிக்கொண்டிருப்பதாகக் காட்டிக் கொண்டு தனக்குச் சாத்தியமான வழிகளில் தலையிடவே எத்தனிக்கிறது என்பதை எவரும் மறுக்க முடியாது.

அண்மைக்காலத்தில் இந்தியாவின் இந்தப்போக்கு மாற்றம் பெற்று வந்திருக்கிறது. இந்தியாவில் ஏற்பட்ட ஆட்சி மாற்றமும், 1980 களில் இருந்த இராஜதந்திரிகளே தற்போது பிரதான கொள்கை வகுப்பாளர்களாக மாறியுள்ளனர்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான், இலங்கை விவகாரத்தில் இராணுவ ரீதியாக உதவிகளை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை இலங்கையிடமிருந்து எழுந்திருக்கிறது.

இராணுவத் தலையீடு சாத்தியமில்லை என்றும் அரசியல் ரீதியான உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் இந்தியா கூறிவருகிறது.

ஆனால், இப்போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ- இலங்கை விவகாரத்தில் இந்தியத் தலையீட்டை வலியுறுத்தியிருக்கிறார். நீண்டகாலமாக இந்தியாவைக் கண்டிக்கும் கொள்கையுடையவர் என இனங்காணப்பட்ட மஹிந்த ராஜபக்ஷவின் இந்தக் கோரிக்கைக்கு இந்தியா எப்படி பதிலளிக்கப்போகிறது.

நோர்வேயின் மத்தியஸ்தத்துடனான சமாதான முயற்சிகள் இழுபறிநிலைக்குள்ளாகியிருக்கும் இந்தச் சூழலில் - அயலில் உள்ள, தென்னாசிய வல்லரசான இந்தியாவிடம் உதவிகோரியிருப்பது இலங்கை அரசு மீதான சந்தேகத்தை வலுப்படுத்துகிறது.

இந்தியாவுடன் நெருக்கமான உறவுகளை வளர்த்துக் கொண்டு, நோர்வேயை ஓரங்கட்டுவதற்கான ஒரு முயற்சியாகக்கூட இது அமையலாம்.

நோர்வே வகிக்கும் பாத்திரத்தை, இந்தியாவால் சமாதான முயற்சிகளில் வகிக்கமுடியாது என்பது மட்டும் உறுதி. ஏனெனில், இந்திய அரசு புலிகள் மீது தடையை விதித்துக்கொண்டு, இந்தச் சமாதான முயற்சிகளில் மத்தியஸ்தம் வகிக்கமுடியாது.

விடுதலைப் புலிகள்கூட முன்னர் இந்தியாவின் பங்கினை வரவேற்றிருந்தனர். ஆனால், இந்தியாவில் புலிகள் மீது விதிக்கப்பட்டிருக்கும் தடையை விலக்கி விட்டுத்தான் இந்தியா இதில் ஈடுபடமுடியும் என்று விடுதலைப் புலிகள் கூறியுள்ளனர்.

இவற்றையெல்லாம் அறிந்துகொண்டும் கூட இலங்கை அரசு இந்தியாவின் பங்களிப்பை மீண்டும் மீண்டும் கோருவதானது சந்தேகத்தினை ஏற்படுத்துகிறது.

அண்மைக்காலமாக ஜே.வி.பியும் கூட - நோர்வேயைச் சமாதான முயற்சியில் இருந்து அகற்றிவிட்டு இந்தியாவைக் கொண்டுவரவேண்டுமென்று கோரி வருகிறது.

இப்படிப்பட்ட நிலைமை இந்தியாவை - இலங்கை விவகாரத்துக்குள் இழுத்துவந்து, சமாதான முயற்சிகளைக் குழப்பத்துக்குள்ளாக்கும் - குட்டையைக் குழப்பும் ஒரு முயற்சியாகவே மஹிந்த ராஜபக்ஷவின் விஜயம் அமைந்துள்ளது.

இலங்கை விவகாரத்துக்குள் இந்தியா எத்தகைய பாத்திரத்தை வகிக்க முடியுமென்பது பற்றிய தெளிவில்லாமல் மேற்கொள்ளக்கூடிய எந்தவொரு முயற்சியும் சமாதான முயற்சிக்கு ஆபத்தானதாக அமையலாம்.

இலங்கை அரசு சமாதான முயற்சியைத் தொடர விரும்புகிறதோ, இல்லையோ இந்தியாவுடன் கை கோர்த்துக் கொள்ளவே முயன்று கொண்டு வருவது உறுதியாகத் தெரிகிறது.

## நாடும் நடப்பும்




# இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு பிரதானகட்சிகள் இணையவேண்டும்

### மல்வத்த பீட மகாநாயக்க தேரர் கோரிக்கை

வடக்கு - கிழக்கின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு இலங்கையின் பிரதான இருகட்சிகளும் இணையவேண்டும் என மல்வத்த மகாநாயக்க தேரர் கோரியுள்ளார்.

இருகட்சிகளும் அரசியல் வேறுபாடுகளை விடுத்து, இரு கட்சிகளும் இணையவேண்டியதன் அவசியத்தை அண்மையில் கண்டிக்கு விஜயம் மேற்கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளேன் என்று -

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய அண்மையில் மல்வத்தை பீடத்திற்கு விஜயம் மேற்கொண்ட போது மகாநாயக்கர் இவ்வாறு தெரிவித்தார். தமிழர்களும். சிங்களவர்களும், முஸ்லிம்களும் ஒற்றுமையுடன் வாழவே விரும்புவதாகவும் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் எவ்விதமான வேறுபாடுகள் இருந்தாலும் நாட்டின நலன் என்றவிடயத்தில் கட்சிகளிடையே ஒற்றுமை இருக்கவேண்டும் எனக் கூறியுள்ள கரு ஜெயசூரிய, ஐக்கிய தேசியக் கட்சி இந்த விடயத்தில் தனது ஆதரவை வழங்கும் எனவும் தெரிவித்தார்.

அரசியல் பலத்துக்காக கட்சிகள் போராடுவதன் மூலம் நாடு பிளவுபட்டுவிடும் எனக்கூறிய கரு ஜெயசூரிய, அடுத்த தலைமுறைக்கு நாடு இல்லாத நிலையொன்றை இது தோற்றுவிக்கும் எனவும் தெரிவித்தார்.

## உலக அபிவிருத்தி அறிக்கையின் தமிழ்ப் பிரதி வெளியீடு

(கிளிநொச்சி)

2004ஆம் ஆண்டுக்கான உலக வங்கியின் உலக அபிவிருத்தி அறிக்கையின் தமிழ்ப்பிரதி வெளியீட்டு நிகழ்வு இன்று காலை 10.00 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள விடுதலைப்புலிகளின் திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த வெளியீட்டு நிகழ்வில் உலகவங்கியின் தெற்காசியாவுக்கான பிரதம பொருளியலாளர் டொக்டர் சந்தயானன் தேவராஜன், உலக வங்கியின் இலங்கைக்கான முதன்மை பொருளியலாளர் றிக்கோ கஸ்ரோ, உலக வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி பீற்றர் கரோல்ட், உலக வங்கியின் டொக்டர் ரரேஸ் துரைசாமி, டொக்டர் டென்காம் போல் , சூலி டி சில்வா, டொக்டர் ஜேர்மி காட்டர் உலகவங்கி, நீல்விரைட யு.என்.சி.ஆர் உட்பட பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## தமிழ் இளைஞர்கள் இருவர் கொழும்பில் கைதாகினர்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை கொலை செய்வதற்கு சூழ்ச்சி செய்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இரு தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முகத்துவாரம் பகுதியிலேயே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கைதாகிய இரண்டு இளைஞர்களில், முதலாவது சந்தேக நபர் இரண்டு நாட்களுக்கு முன்னர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவரை விசாரணைக்கு உட்படுத்தியபோது வழங்கிய தகவலின் பேரிலேயே இரண்டாவது சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தன்னாட்சி அதிகாரசபை அடிப்படையில் பேச்சுக்களை நடத்த ஆதரவளிப்போம்

### சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

கருணாவோடு உள்ள தொடர்புகளைக் கைவிட்டு இடைக்கால நிர்வாக சபையை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தை நடத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமானால் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் 22 பேரின் ஒத்துழைப்பு அரசுக்கு வழங்கப்படும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

ஞாயிறு லங்காதீப பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது-

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு உள்ள சந்தர்ப்பத்தை அரசு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அது போன்ற நிலவரம் ஏற்படுத்தப்படுமானால் அரசு உடைந்து போவதற்கு இடம்கொடுக்காது பாதுகாப்பது எங்கள் பொறுப்பாகும்.

மீண்டும் யுத்தம் ஒன்று தோன்றக்கூடிய நிலவரம் தற்போது கட்டி எழுப்பப்பட்டுள்ளது. இந்த நிலவரத்தினை மாற்றி சமாதானச் செயற்பாடுகளுக்கு மீண்டும் உயிர் கொடுக்கும் பொறுப்பு அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தே)

### கிளிநொச்சி வைத்தியசாலை

## அதிதீவிர சிகிச்சைப் பிரிவு நாளை திறப்பு விழா!

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஜப்பான் அரசின் ஆதரவுடன் அமைக்கப்பட்ட அதிதீவிர சிகிச்சைப் பிரிவின் திறப்புவிழா நாளை காலை 10.45 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக இலங்கைக்கான ஜப்பானிய தூதுவராலய பொருளாதாரப் பிரிவு முதன்மை செயலாளர் டொக்டர் யு.ஜி.நியாகாராவும், சிறப்புவிருந்தினராக டொக்டர் எஸ். குமாரவேல்பிள்ளை, வடகிழக்கு மாகாணசபை மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் டொக்டர் ஆர்.எம். எஸ்.ரட்ணாயக்கா, வடக்கு -கிழக்கு சுகாதார அபிவிருத்தி திட்ட இணைப்பாளரும், நிபுணத்துவ ஆலோசகருமான டொக்டர் வி.ஜெகநாதன், யுனிசெவ் அமைப்பின் இலங்கைக்கான பதில் பிரதிநிதி யஸ்டின் கக், கிளிநொச்சி அரசாங்க அதிபர் தி. இராசநாயகம், தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் என்.அருண், சுகாதார பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் டொக்டர் வை.டீ.நிகால் ஜெயதிலக ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர்.

## காங்கிரஸிலிருந்து விலக்கப்பட்டவர்களுக்கு அமைச்சர், பிரதி அமைச்சர் பதவிகளாம்

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து விலக்கப்பட்ட மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர், பிரதி அமைச்சர் பதவிகள் வழங்கி அரசாங்கக் கட்சியில் சேர்த்துக் கொள்வதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

இதன்பிரகாரம் நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாட் பதியுதீனுக்கு வன்னிப் புனர்வாழ்வு அமைச்சை வழங்குவதற்கும், நாடாளுமன்ற உறுப்பினர் அமீர் அலிக்கு மட்டக்களப்பு பிரதேச அபிவிருத்தி அமைச்சர் பதவியையும், நாடாளுமன்ற உறுப்பினர் நஜீப் மஜீத்துக்குப் பிரதி அமைச்சர் பதவியையும் வழங்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அறிக்கைகள் தெரிவித்தன.

நஜீப் மஜீத் தனக்கு துறைமுக அபிவிருத்தி பிரதி அமைச்சர் பதவி தேவையென ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச புலனாய்வு அரசியல் -வன்கூவரிலிருந்து, ரிஷி

# மீண்டும் அமெரிக்காவுக்கு தலைவலி

(நேற்றைய தொடர்ச்சி)

**Diversion of Signal Tramsmision** ஐ தடுக்க முடியாதா? முடியும். ஆனால் அதற்குச் செலவு கொஞ்சம் அதிக மாகும். **Jamming Multiple devises** தேவைப்படும். இந்த நிலையில் இவ் வகை **Multiple Jamming** இருப்பது



I.R.B.M. ஏவுகணையின் தோற்றம்

அமெரிக்கா, சீனா போன்ற நாடுகளி லுள்ள அநேக கேந்திர முக்கியத் துவம் வாய்ந்த இராணுவ கேந்திர நிலையங்களிலும், ஜேர்மன், ஜப் பான் ஆகிய நாடுகளிலுள்ள ஓரிரு முக்கிய இடங்களிமாகும, ரஷ்யாவில் இது இல்லை என்றும் சொல்கின்றார்கள்.

இந்தவகை **Multiple divises** ஐ வைத்து இயக்குவது என்பது பணத் தினை மேலதிகமாக இழுத்தெறிந்து விடக் கூடியது. ரஷ்யா இன்றிருக்கும் பொருளாதார நிலையில் அவர்களது இராணுவ வரவு செலவுத்திட்டத்தி னால் அதை **Afford** பண்ண முடியாது.

மொத்தத்தில் **Operation Security** 2004 இராணுவ நடவடிக்கை ரஷ்யாவை பல வருடங்களின் பின் னர் - மீண்டும் இராணுவ ரீதியில் ரஷ்யாவை முக்கியம் வாய்ந்த ஒரு நாடாக வெளியுலகத்துக்குக் காட் டும் என்ற ரஷ்யாவின் எதிர்பார்ப்பு, பாதிக்கிணறு தாண்டிய நிலையில் முடிந்து போனது. அதற்கு முக்கிய காரணம் இரு நாட்களில் முயற்சிக் கப்பட்ட மூன்று ஏவுகணை ஏவுதல் களில் ஒன்று கூட வெற்றியளிக்க வில்லை என்பது. **S.L.B.M.**களின் தோல்விக்கான காரணங்களை ஆராய ரஷ்யா நான்கு விசாரணைக் **Comission** களை அமைத்திருக்கின்றது. இன்று வரை இந்த விசாரணைகளில் இருந்து எங்கே எப்படிச் சறுக்கினார் கள் என்கின்ற விடயம் தெரியவில்லை. குழறுபடிக்குக் காரணம் ரஷ்யாவுக் குள் ஊடுருவியுள்ள வெளிநாட்டு உளவுப் பிரிவுகள் என்று உறுதி யானால் ரஷ்ய உளவுத்துறைக்கு **K.G.B.** சத்தம் வெளியே கேட் காதவாறு இரகசியமாக இரவோடு இரவாக சிலரை மேலே அனுப்பி விடும். காரணம் ரஷ்யாவுக்கு வெளியே இருந்து சற்றலைற் மூலம் செய்யப் பட்ட இடையூறு என்றால் அப்போதும் விடயத்தை வெளியேவிடாது, அமுக்கி விட்டு உள்ள தொழிற்நுட்பத்தை என்ன செலவானாலும் **Upgrate** பண் ணப் பார்ப்பார்கள். சற்ற லைற்குள் தேடுதலுக்கு நிருபணம் கையிலும் கிடைப்பது கஷ்டம் ஒருவேளை கிடைத் தாலும் அதை பகிரங்கப்படுத்துவது ரஷ்யாவின் தன்மானத்துக்கு ஒத்துவ ராது. எனவே, காரணம் இந்த இரண் டில் எதுவாக இருந்தாலும் காதும் காதும் வைத்தாற்போல காரியத்தை சரி செய்து முடிப்பதுதான் புத்தி சாலித்தனம். **Operation Security** 2004 இல் **S.L.B.M.** ஏவல் முயற்சி யைத் தவிர மற்றைய செயற்பாடு களால் அநேகமாக எல்லாமே வெற்றி கரமாக நடந்து முடிந்தன.

அவற்றில் சில இராணுவ ரீதி யில் முக்கியத்துவம் வாய்ந்தவை. உதாரணமாக **S.L.B.M.** ஏவப்படு வதை பார்க்க வந்த ரஷ்ய அதிபர் **S.L.B.M.** முயற்சி தோல்வியில் முடிந்த பின்னர் மறுநாள் சென்ற இடம் "ப்ளஸ்ரெஸ்றெற் ஸ்ரேன்ஜ்" எனச் சொல்லியிருந்தோம். அங்கே **S.R.F.** இனால் மூன்று ஏவல்கள் திட்டமிடப்பட்டிருந்தன. ஒன்று **S.L.V.** எனப்படும். **Fresh Clound Vehicle** ஏவல் எனப்படும். **Freal Smoniya.** சற்றலைற் ஒன்றை வானில் எடுத் துக் கொண்டு செல்லுமாறு திட்டமிடப் பட்டிருந்தது. இரண்டாவது **Tofod I.R.B.M.** மூன்றாவது ஒரு **F.F.L.** அல்லது ரஷ்ய **Short Name U.R - 100 U.T.P.K.H.** இந்த மூன்று ஏவல் களிலும் என்ன விஷேசம் என்றால் இந்த மூன்று ஏவல்களுமே **Remote Control** ஒன்றின் மூலம் கஸ கஸ்தானில் இருந்து ஏவப்பட்டன. மூன்றுமே வெற்றிகரமாகச் செயற் பட்டன. இவையே **Operation Securite** 2004 இல் ரஷ்ய அதிபரின் மானத் தினைக் கடைசியில் காப்பாற்றியி ருக்கின்றன.

சறுக்கிவிட்ட **S.S.N-23, S.L.B.M.** களை மீண்டும் ஒருமுறை ஏவி வெற்றிகரமாக வெளியுலகத்துக்குக் காட்டுவது ரஷ்யாவின் இன்றைய நிலைமையில் முக்கியமான அலுவல் என எதிர்பார்க்கலாம்.



ஏவப்படத் தயாராகும் I.R.B.M. ஏவுகணை

அந்த ஏவலிற்கு எப்போது ரஷ்யா முயற்சிக்கும் என்றால் **Operation Security** 2004 இல் ஏற்பட்ட சறுக் கல்களுக்கு பின்னால் யார் இருக் கின்றார்கள் அல்லது யாராவது இருக்கின்றார்களாக என உறுதியாகத் தெரிந்த பின்னர்தான். எங்களது சந் தேகம் சரியாக இருந்தால் யாரோ, எங்கேயோ, ஏதோ சில்மிசம் செய் திருக்கின்றார்கள். ஏனெனில் **S.S.N-23** ரக ஏவுகணைகள் 1990 களில் இருந்து இதுவரை மொத்தம் 36 தடவைகள் ஏவப்பட்டிருக்கின்றன. அதில் பிழைத்துப் போனது இந்த மூன்றே மூன்று தடவைகள்தான். அது வும் ரஷ்யாவின் முக்கிய இராணுவ நடவடிக்கை ஒன்றில் இரண்டு தினங் களுக்குள் மூன்று தடவைகள்.

நீங்கள் அடுத்துவரும் சில மாதங் களில் எப்போதாவது ரஷ்யா **S.S.N-23** ரக ஏவுகணை ஒன்றைப் பரி சோதித்துப் பார்த்தது என்ற செய்தி யினைப் பத்திரிகைகளில் படிக்க நேர்ந்தால் மௌன அஞ்சலி செய்ய லாம். ஏனென்றால் ரஷ்ய உளவுத் துறை **K.G.B.**க்கு ஏற்கனவே இந்த விஷயத்தில் **Home Work** ஒன்று கொடுக்கப்பட்டிருக்கும். அதை அவர் கள் செய்து முடித்த பின்னர்தான் ரஷ்யா அடுத்த தடவை **S.S.N-23** ரக ஏவுகணை ஒன்றை ஏவ முற்படும். அந்த சமயத்தில் ஏதோ ஒரு வெளி நாட்டு உளவு அமைப்பின் ரஷ்ய உளவாளிகள் ஒரு சில பேர் அவர் களது ரஷ்யன் பெயரில் இருந்து காணாமற்போய் இருப்பார்கள்.

(முற்றும்)

செய்திக்கட்டுரை... - அறிதிரு



# குடாநாட்டுக்கு இரணைமடுவிலிருந்து நீர் வன்னிப் பகுதி விவசாயம் பாதிக்குமா?

யாழ்ப்பாணத்தில் நீர் மாசடைவ தால் அதிகரித்துவரும் நோய்த்தாக் கத்தை தடுக்க இரணைமடு நீர் யாழ்ப் பாணம் செல்வது அவசியமாகிவரு கின்றது. குறைந்த நிலப்பரப்பில் அதி கரித்த மக்கள்தொகை, மலசல கூடங் களின் அதிகரித்த பாவனை, செயற்கை உரப்பயன்பாடு என்பன யாழ்ப்பாண நிலத்தடி நீரை அதிகளவில் மாசடை யச் செய்துவிட்டது.

யாழ்ப்பாண நிலத்தடி நீரில் யூரி யாவின் வீதம் 40 ஆக உயர்ந்து விட்டது. இதுவே யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் அதிகரிப்பு மற்றும் பல் வேறு நோய்தாக்கங்களுக்கு அடிப் படைக் காரணம் எனக் கண்டறியப் பட்டுள்ளது. இதற்கு மாற்றீடாக குடி நீரை நல்லதாக வழங்க இரணைமடு நீரே அவசியமானதாக மாறியுள் ளது. இரணைமடுவைப் பொறுத்த வரை அதற்குப் பிரச்சினை உள்ளது. அது இரணைமடு நீர் கிளிநொச்சி யின் விவசாயத்துக்கே போதுமானதா என்பதாகும். வன்னியைப் பொறுத்த வரை விவசாயிகள் நீர்முகாமைத் துவத்தை கையாள்வதில்லை. சிறு போகத்தில் சேறடிப்பதற்கு அளவுக் கதிமான நீரை விரயமாக்குகின்றனர் என கிளிநொச்சி நீர்ப்பாசனப் பிரி வினர் கூறுகின்றனர்.

கிளிநொச்சி மட்டுமல்ல, வன்னி முழுமையிலும் இப்படியேதான் உள் ளது. முதற்கட்டம் இரணைமடுவின் வாய்க்கால்கள் சிதைந்திருப்பதால் விரயமாகும் நீரைத்தடுக்க அவை சீர்செய்யப்படவேண்டும். அடுத்த கட்டம் விவசாயிகள் நீர் முகாமைத் துவத்தை பேணவேண்டும். இதன் மூலம் நீர் விரையத்தைத்தடுக்க நீரைச் சேமிக்க வேண்டும். அடுத்த கட்டம் இரணைமடு நீர்த்தேக்கம் புனரமைக்கப்படுதல்.

இரணைமடு நீர்த்தேக்கம் 1977 இன் பின்னர் புனரமைக்கப்படவே யில்லை. 1981 இல் விவசாய விரிவாக கத்திட்டத்தின் கீழ் குளங்கள் புனர மைப்பு நடந்தபோதும், அரசியல் காரணங்களுக்காக தமிழர் பகுதிக் குளங்கள் புறக்கணிக்கப்பட்டன. அவ்வாறு புறக்கணிக்கப்பட்டவற்றில் இரணைமடுவும் ஒன்று. இப்பொழுது 34 அடி நீர் கொள்ளக்கூடிய இரணை மடுவில் 28 அடி நீரேதேக்கக் கூடிய தாக இருந்தது. இரணைமடுவுக்கு திருவையாறு ஏற்று நீர்ப்பாசத் திட்டமும் உள்ளது. இது 14 ஆண்டு களின் முன் செயலிழந்து போனது. 27 ஆண்டுகளுக்கு புனரமைப்பு செய் யப்படுவதே யாழ்ப்பாணத்திற்கு நீர் வழங்க, செய்யப்படவேண்டிய முதல் பணியாகும்.

அணைக்கட்டு மடைக்கதவுகள், அணைக்கட்டு கசிவுகளடைப்பு, வாய்க் கால்கள் திருத்தம், ஏற்று நீர்பாசன புனரமைப்பு ஆகியவற்றுக்கான மொத்த செலவீடு 3800 மில்லியன் ரூபா முதல் 4500 மில்லியன் ரூபா வரையாக மதிப்பிடப்பட்டுள்ளது. இத் திட்டம் - நிதி வழங்கும் நாடுகளின் அமைப்புக்களிடம் முன்வைக்கப் பட்டபோது ஒரு மாவட்டத்திற்கு ஒரு நீர்த்தேக்கத்திற்கு இந்த தொகையை செலவிடுவதைவிட 8 மாவட்டங் களில் சிறுகுளங்களுக்குச் செலவிட லாம் என அவை நிராகரித்துவிட் டன. இரணைமடுவின் அவசியம் கிளிநொச்சி முதல் பூநகரி வரையான பகுதிக்கும், இனி யாழ்ப்பாணத்துக் கும் குடிநீரை வழங்கவேண்டியதாக நிலை ஏற்பட்டதால் உணரப்பட் டுள்ளது.

இதுவரை சிறுகுளங்களின் புனர மைப்பில் மட்டும் ஈடுபட்டு வந்த நியாப், தன் 3 ஆம் கட்டம் திட்டத் தில் ஒரு சிறுதொகையாக 100 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது. அதன் மூலம் அணைக்கட்டுத் திருத்தம் மட் டுமே மேற்கொள்ளப்படும். அணைக் கட்டுத் திருத்தம் மூலம் இரணைமடு வின் மொத்தக்கொள்ளவான 34 அடிக்கு நீரைத்தேக்க முடியும். நியாப்பின் பணி முடியும் தறுவாயில் வாய்க்கால்களை புனரமைக்க ஜப் பானிய அமைப்பான ஜபிக் இணங் கியிருக்கிறது. இரணைமடுவின் புனர மைப்பு நிலை இது.

யாழப்பாணத்திற்கான குடிநீ இர ணைமடுவிலிருந்து பெறப்படவேண் டும் என்ற நிலைமை வலுப்பெற்று வருகின்றது. இதற்கான ஆய்வு களில் நீர் வழங்கல் வடிகாலமைப்பு வகை தரப்பு ஈடுபட்டுள்ளது.

ஏற்கனவே உள்ள யாழ்ப்பாணத துக்கான குடிநீர் திட்டங்களில் ஆனை யிறவு நீரினை நன்னீரேரியாக்கும் ஆறுமுகம் திட்டமும் ஆய்வுக்குட்பட் டுள்ளது. இரணைமடு, கல்மடு, உடை யார்கட்டுக்குளம், விசுவமடுக்குளம் என்பவற்றில் நீர் நிரப்பி ஓடும் கனக ராயன் ஆறு, நெத்தலி ஆறு, பிரமந் தன்ஆறு, தேராவில் ஆறு, என்ப வற்றின் நீர்தான் ஆனையிறவு கடலே ரியை நிறைக்கிறது. இக்கடலேரி மட்டம் உயர்கையில் அது நல்ல தண்ணித்தொடுவாயில் உடைத்து கடல்நீரை, இந்த இடத்தில் ஒரு அணையைக்கட்டி, கால்[illegible]கையைத் தடுத்து மேற்கே கண்டி[illegible]யை ஒரு பக்க அணையாகக் கொண்டு குடா நாட்டுக்கான நன்னீரேரியாக ஆனை யிறவை ஆக்குவதே ஆறுமுகம் திட்ட மாகும். எது எப்படியோ குடாநாடு குடிநீர்க்கு மிகுந்த சிக்கலை எதிர் கொண்டுள்ளது. இதனைக் காப் பதாக இரணைமடு அமையப் போகின்றது. அதற்கு இரணைமடு முழு புனரமைப்பை எதிர்நோக்கி யிருக்கின்றது.

இராணுவத்தினரின் ஆக்கிரமிப் பால் இடம்பெயர்ந்து, மீளவும் மக் கள் மீள்குடியமர்ந்துள்ள கிளிநொச்சி, பூநகரியில் இதுவரை ஆக்கபூர்வ மாக புனரமைப்புப் பணிகள் இடம் பெறவில்லை. பரந்தன் - பூநகரி, பூநகரி- மன்னார் ஆகிய முதன்மைப் போக்குவரத்துவீதிகள் புனரமைக்கப் படவில்லை. மணல் ஊர்திகளின் போக்குவரத்துக்காக மட்டும் பூநகரி பரந்தன்வீதி புழுதிவீதியாக புனர மைக்கப்பட்டுள்ளது. உட்கட்டுமானங் கள் எவையும் செய்யப்படவில்லை. மீளவும் பூநகரிக்கு கூட்டுறவுச் சங் கமும் உதவி அரச அதிபர் செயல கமும் சென்றுள்ளன. ஆனால், அவை இரவல் கட்டங்களில்தான் இயங்கு கின்றன. துப்புரவுப்பணி கூட அங்கு நடைபெறவில்லை.

கடந்த காலத்தில் இராணுவத்தி னரால் பூநகரி ஆக்கிரமிக்கப்பட்டது. தவளை நடவடிக்கை மூலம் அதன் ஒரு பகுதி விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்டது. 1996 இல் கிளிநொச் சியை ஆக்கிரமிப்பதற்காக பூநகரி யில் நிலைகொண்டிருந்த இராணு வம் அங்கிருந்து பின்வாங்கின. அதன் பின்பும் படையினரின் வெடி பொருட்கள் தொடர்பாக அங்கு உடன டியாக மக்கள் மீள்குடியமர முடிய வில்லை. ஓரளவு பாதுகாப்புடைய தென கருதப்பட்ட இடங்களில் மட்டும் மக்கள் மீள்குடிய மர்ந்தனர்.

பூநகரியின் நிரந்தரகுடிமக்களாக 46 ஆயிரத்து 156 பேர் இருந்தனர். இவர்களில் போர் காரணமாக 41 ஆயிரத்து 270 பேர் இடம்பெயர்ந் தனர். இடம்பெயராதவர்களாக 4886 பேர் மட்டுமே இருந்தனர். 2002 போர் நிறுத்த உடன்பாட்டின் பின்னரே பூநகரியில் மீளக்குடியமர்வு அதிக மாக இருந்தது. மக்கள் மீளக் குடியமர்ந்த பகுதிகளின் உட்கட்டு மானங்கள் படையினரால் சிதைக்கப் பட்ட இடங்களாகும். பூநகரி அதிகம் கடற்கரை உவர் வெளிகளைக் கொண்ட ம[illegible]ல் வெளிகளைக் கொண்ட பிர தேசம். நிலக்கீழ் நீர் இருக்கின்ற போதிலும் அதன் நிலத்தடி நீர்மட் டம் ஆழம் குறைந்ததாகும். இரா ணுவத்தினர் பூநகரியின் உட்பகுதிக் குள் கடல்நீர் உட்புகுவதை தடுக்க அமைக்கப்பட்டிருந்த உவர் நீர் தடுப் பணைகளைச் சிதைத்தனர். படை ஆதிக்கத்திற்கு வெளியேயிருந்த தடுப்பணைகள் பராமரிப்பு இன்றி சேதமாக்கிவிட்டன. மேலும் இரா ணுவம் தமது முகாமருகுவரை கடலி லிருந்து படகுகளைக்கொண்டு வரு வதற்காக பயிர்செய்நிலங்கள் வழி யாக அகழிகள் அமைத்திருந்தனர். இதனால் பூநகரியின் பெரும்பகுதி களுள உவர்நீர் உட்புகுந்துவிட்டது.

இதனால் நிலத்தடி நீர் உவராகி வருகின்றது. இதனை மீட்க பூநகரி யில் உவர்நீர் தடுப்பணைகள் அமைக கப்படவேண்டும். குடிநீர் வழங்கல் மேற்கொள்ளப்படவேண்டும். இப் பொழுது கிளிநொச்சி மாவட்டத்தில் குடிநீர் வழங்கல் இரணைமடு நீர்த் தேக்கத்தை ஆதரமாகக்கொண்ட கிளிநொச்சி குளத்திலிருந்து ஏற்றி வடிகட்டப்பட்டு வழங்குவதற்காக ஏற்பாடு நடக்கின்றது. இது கிளி நொச்சி நகருக்கானது. கிளிநொச்சி நகரைப் பொறுத்தவரை இரணைமடு வின் ஆதாரத்தில் ஆழம் குறைந்த கிணறுகள் நன்னீரைத் தரக்கூடிய தாக உள்ளது. ஆனால் குடிநீர் தேவை அதிகம் உடைய பூநகரி யைவிட நகருக்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து பூநகரி மக்கள் கவலை கொண் டுள்ளனர். உவர்நீர் தடுப்பணைகள் புனரமைக்க ஜப்பானின் ஜபிக் நிறுவனம் 150 மில்லியன் ரூபாக் களை வழங்க முன்வந்துள்ளது. பூநகரியில் போரால் இடம்பெயர்ந்த குடும்பங்களில் 3881 குடும்பங்களே மீளக்குடியமர்ந்துள்ளன. இவற்றில் 878 குடும்பங்கள் போரால் தம் குடும் பத் தலைவர்களை இழந்துள்ளன.

பூநகரிக்கு ஒரு சுற்றயல்கூறு மருத்துவமனை இருந்தபோதும் அது போரால் முழங்காவிலுக்கு இடம்பெயர்ந்து விட்டது. மீளவும் அது சொந்த இடத்தில் இயங்க வில்லை. இப்போது அங்கு உள்ள தியாகதீபம் திலீபன் மருத்துவமனை யும் அதனிடம் இருக்கும் எழுச்சி பேரவையால் வழங்கப்பட்ட நோயாளி காவு வண்டியுமே உயிர் காப்பு அடைக்கலமாக உள்ளது. அரசமருத் துவமனையின் ஒரு சிறு சிகிச்சை நிலையம், ஆளணிப்பற்றாக்குறை யுடன் இருந்தும் இல்லாத நிலை யில் இருக்கின்றது.

பூநகரியில் வாடியடி முதல் கல் முனை வரை உள்ள கரையோரவீதி மக்கள் குடியமர்கின்றபோதும் ஒரு மிதிவண்டியைக் கூட ஓட்டிச்செல்ல முடியாத நிலயில் எதுவித புனர மைப்பும் இன்றி உள்ளது.

பூநகரி இப்படிப்பட்ட பரிதாப நிலை யில் இருக்க பூநகரியின் புகழ்பெற்ற ருசி மிகுந்த இயற்கை உரத்தில் விளையும் பாரம்பரிய நெல்லின அரிசி யின் பெயரில் தமிழகத்திருந்து இறக்குமதி செய்யப்படும் 2 ஆம் நிலை இரசாயன அரிசியை பொதி செய்து 'பூநகரி அரிசி' எனப் பெய ரிட்டு இலாபம் பார்க்கும் மோசடி ஐரோப்பிய புலம்பெயர்ந்த ஈழத்தார் மத்தியில் அரங்கேற்றப்படுகின்றது. ஆனால் பூநகரி விவசாயிகளோ வறு மையின்பிடியில் எதுவித வாழ்வு முன்னேற்றமுமின்றி அதே ருசியான அரிசியாகும் நெல்லை பயிரிட்டபடி உள்ளனர். வளமிகு ஏரிக்கடலை யுடைய பூநகரி மீனவர்கள் கிளாலி, கேரதீவு படைமுகாம்கள் காரண மாக சுயாதீனமாக அகன்று சென்று மீன்பிடிக்க முடியாதுள்ளனர். இலங் கைத்தீவின் தொல்கால நவீன மனி தன் (28000 ஆண்டுகளுக்கு முன்) வாழ்ந்த எம் மூதாதைகளின் சான்று கள் மணல் அள்ளப்படுவதன் மூலம் மறைகின்றன. கேரதீவு சங்குப்பிட்டி போக்குவரத்தின்போது பொலிவு பெற்றிருந்த வாடியடி இன்று பாழ டைந்து கிடக்கின்றது. இலங்கை யின் மூத்த நகரம் போரால் சிதைந்து மீட்சியின்றிக் கிடக்கின்றது. வெண் மணல் நிறை பூநகரி மீள எழுவ தற்காக காத்திருக்கின்றது. ♦

# அமெரிக்க விமானப்படை தாக்குதல்;
# ஈராக்கில் 14 பொதுமக்கள் பலி!



ஈராக்கின் பலூஜா நகரில் அமெரிக்க விமானங்கள் நேற்று நடத்திய தாக்குதலில் 14 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக ஈராக்கின் வைத்தியர்கள் தெரிவித்தனர்.

கொல்லப்பட்டவர்களில் பெண்களும், குழந்தைகளும் அடங்குவதாக ஈராக்கின் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதை அமெரிக்க இராணுவமும் உறுதிப்படுத்தியுள்ளது. இந்தத் தாக்குதல் அல்கொய்டா ஆதரவாளர்கள் தங்கியிருந்த வீட்டின் மீதே நடத்தப்பட்டதாகவும் அமெரிக்க இராணுவம் தெரிவித்ததுடன், இது தொடர்பான மேலதிக விபரங்களை ஈராக்கிய பாதுகாப்பு அமைச்சிடம் கேட்டுக் கொள்ளுமாறும் தெரிவித்தது. ஆனால், இந்தத் தாக்குதல் தொடர்பாக ஈராக் அரசு எவ்வித கருத்தையும் தெரிவிக்கவில்லை.

நாங்கள் நான்கு ஜெட் போர்விமானங்களின் சத்தத்தைக் கேட்டோம். அதன்பின்னர் பொதுமக்கள் வாழும் வதிவிடங்களில் நான்கு குண்டுகள் விழுந்து வெடித்த சத்தத்தைக் கேட்டோமென பலூஜாவிலுள்ள படைகளின் அதிகாரிகளில் ஒருவரான லெப்.சாட்கலாவ் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலில் 14 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். வெடிகுண்டுத் தாக்குதலின் பின்னர் நாம் சம்பவ இடத்திற்கு விரைந்து, இறந்தவர்களின் உடல்களைத் தேடி எடுத்து, பின்னர் புதைத்தோமெனவும் அவர் தெரிவித்தார்.

தாக்குதல் நடத்தப்பட்ட வீட்டிற்கு முன் கூடிய பெருமளவு மக்கள் - 'இறைவனே உயர்ந்தவன்' என்றவாறு கோஷமெழுப்பியபடி நின்றனர்.

## இயற்கையை ரசிக்கும் போப்பாண்டவர்



போப்பாண்டவர் 2 ஆம் ஜோன்போல் இத்தாலியின் வடக்குப் பகுதியில் உள்ள வாலிபு அஸ்டா பகுதிக்கு ஓய்வு எடுக்கச்சென்றார். இயற்கை எழில் நிறைந்த மலை வாசஸ்தலம் இது.

அங்குள்ள மாண்ட் பிளாங்க் மலை அடிவாரத்தில் உட்கார்ந்தபடி அவர் இயற்கை எழிலை ரசித்துப் பார்த்த காட்சி. இங்கு ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தபோதுதான் கும்பகோணம் பள்ளித் தீ விபத்துப் பற்றி அவருக்குத் தகவல் கிடைத்தது.

# பலஸ்தீனப் பிரதமர் கூரே பதவியிலிருந்து விலகவுள்ளார்




பலஸ்தீனப் பிரதமர் அகமட் கூரே - தனது பதவியிலிருந்து விலகுவதாக, ஜனாதிபதி யஸீர் அரபாத்துக்கு அறிவித்ததையடுத்து ஏற்பட்ட அரசியல் நெருக்கடி குறித்து ஆராய்வதற்கு, பலஸ்தீனத்தில் உயர்மட்ட அவசர கலந்துரையாடல் நடைபெற்றுவருகிறது.

காஸாப்பகுதியில் இஸ்லாமிய ஆயுததாரிகளால் வெளிநாட்டவர் நால்வர் மற்றும் பலஸ்தீனப் பொலிஸ் அதிகாரி ஒருவர் கடத்தப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவத்தையடுத்தே பிரதமர் கூரே தனது பதவி விலகல் கடிதத்தை அரபாத்திடம் கையளித்தார். ஆனால், இந்த பதவி விலகல் கடிதத்தை அரபாத் ஏற்கவில்லை. இருந்தாலும் கூரே தனது பதவி விலகல் முடிவிலிருந்து மாற்றமில்லாமல் இருப்பதாகப் பலஸ்தீனத்தின் சிரேஷ்ட அமைச்சர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, பலஸ்தீனத்தின் பாதுகாப்பு நிலையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரத் தனக்கு அதிக அதிகாரங்கள் தரப்பட வேண்டு



மென பிரதமர் கூரே ஜனாதிபதி அரபாத்திடம் கேட்டதாகவும் சொல்லப்படுகிறது.

பலஸ்தீன அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும் ஊழல்களுக்கு எதிராகவும், பலஸ்தீனத்தின் பாதுகாப்பு பிரிவினை சீர்திருத்தம் செய்வதற்காகவுமே - தாம் நான்கு வெளிநாட்டவரையும், பலஸ்தீன பொலிஸ் அதிகாரியையும் கடத்தியதாக இஸ்லாமிய ஆயுததாரிகள் தெரிவித்தனர்.

பலஸ்தீனத்தின் நிலைமைகள் தொடர்பாகப் பிரதமர் கூரே தெரிவிக்கையில் - பலஸ்தீனத்தின் பாதுகாப்பு நிலைமை மிகவும் சீரழிந்த நிலையிலுள்ளது. சட்டம், ஒழுங்கு மிகவும் சீரழிந்து காணப்படுகிறது எனத் தெரிவித்தார்.

# பூசணியின் விலை ரூபா ஆறாயிரம்



காய்கறிகள் சில நேரங்களில் வித்தியாசமான வடிவில் காய்ப்பதுண்டு. இதை அவ்வளவு பெரிதாக நாம் எடுத்துக் கொள்வதில்லை. ஜப்பானில் உள்ள ஒரு காய்கறிக் கடையில் பூசணி ஒன்று வித்தியாசமான வடிவில் விற்பனைக்கு வந்துள்ளது.

உருண்டை வடிவில் இல்லாமல் அந்தப் பூசணி பிரமிட் வடிவில் இருக்கிறது. இதனை ஒரு கடைக்காரர் காட்சிக்கு வைத்து அதன் விலையை உயர்த்திவிட்டார். பிரமிட் வடிவப் பூசணியைச் சுற்றி ஒட்டகப் பொம்மைகளை வைத்து, அதற்கு 6 ஆயிரம் ரூபா விலை குறித்திருக்கிறார் அந்த வியாபாரி.

# விமானங்களின் சாகசம்



இங்கிலாந்துக்கும், பிரான்சுக்கும் இடையே இருந்துவந்த மோதலை முடிவுக்குக் கொண்டுவர, இரு நாடுகளுக்கும் இடையே அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது.

இந்த ஒப்பந்தம் ஏற்பட்டு 100 ஆண்டுகள் நிறைவையொட்டி பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் - இரு நாட்டுப் போர் விமானங்களும் சீறிப் பாய்ந்து வான்வெளியில் சாகசம் நிகழ்த்தின.

# மருத்துவ சிகிச்சைக்காக ஜென்கின்ஸ் ஜப்பான் வந்தார்



அமெரிக்க இராணுவத்திலிருந்து தப்பியோடி வடகொரியாவில் வசித்துவந்த சார்லஸ் ஜென்கின்ஸ், மருத்துவ சிகிச்சையைப் பெறுவதற்காக நேற்று ஜப்பான் வந்தடைந்தார்.

சார்லஸ் ஜென்கின்ஸின் வயிற்றில் சத்திரசிகிச்சை நடைபெற்ற பின்னர், அவர் அமெரிக்க சிறைச்சாலைக்கு அனுப்பப்படுவாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜென்கின்ஸ், அவரது ஜப்பான் நாட்டைச் சேர்ந்த மனைவி, அவரது இரண்டு மகள்கள் ஆகியோருடன் இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த்தாவிலிருந்து விமானம் மூலம் ஜப்பானை வந்தடைந்தார்.

இவர் விமானத்திலிருந்து ஊன்றுகோலின் துணையுடன் மிகவும் களைப்படைந்த நிலையில் இறங்கிவந்து விமான நிலையத்தில் பஸ்ஸிற்காகக் காத்திருந்ததை ஜப்பான் தொலைக்காட்சி ஒளிபரப்பியது.

இவரது வயிற்றில் ஏற்பட்டுள்ள நோயால், மிகவும் அவசரமான முறையில் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே வடகொரியாவின் தலைநகரிலும் இவர் சத்திரசிகிச்சை செய்தமை குறிப்பிடத்தக்கது.

# மொஸ்கோ சஞ்சிகையின் ஆசிரியர் ரஷ்யாவில் வெட்டிப் படுகொலை



ரஷ்யாவிலிருந்து வெளிவரும் மொஸ்கோ சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் பயல் பிலோயன், கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டார்.

இவரது உடல் ரஷ்யாவிலுள்ள பிரதான வீதியொன்றில் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டதாக ரஷ்ய ஊடகங்கள் தெரிவித்தன

இவரது நெஞ்சிலும், முகத்திலும் கத்தியால் குத்தப்பட்ட காயங்கள் காணப்பட்டதாக ரஷ்ய பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

இவரது சடலம் மொஸ்கோவிலுள்ள பிரதான வீதியில் சனிக்கிழமை காலை கண்டுபிடிக்கப்பட்டதாக ரஷ்ய பொலிஸார் தெரிவித்தனர்.

கொல்லப்பட்ட பிலோயன், மொஸ்கோ சஞ்சிகையில் - ஆர்மேனிய மக்களின் வாழ்க்கைத்தரம் குறித்த ஆய்வினை மேற்கொண்டு வந்துள்ளார்.

இதனால், இவரது கொலையுடன் மேற்படி விடயமும் சம்பந்தப்பட்டிருப்பதற்கு மறுப்பதற்கில்லையெனவும் ரஷ்யப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஒன்பதாம் திகதி - அமெரிக்கப் பிரஜையும் அமெரிக்காவில் தலைமையகத்தைக் கொண்டு ரஷ்யாவில் கிளைப்பதிப்பை நடத்திவரும் போபஸ் சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான கிளிப்நிகோவ் என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த 2000 ஆம் ஆண்டிலிருந்து கிளிப்நிகோவ் வரை 15 பத்திரிகையாளர்கள் ரஷ்யாவில் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அல்கொய்டாவின் செயற்பாடுகள் ஈரானில் முற்றாக ஒழிப்பாம்

## அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் தகவல்

ஈரானில் செயற்பட்டு வந்த அல்கொய்டா அமைப்பின் சகல கிளை நிறுவனங்களும் இல்லாதொழிக்கப்பட்டதாக ஈரான் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அல்கொய்டா அமைப்பின் சகல பயங்கரவாத நடவடிக்கைகளும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டதாக, ஈரானின் தகவல் தொடர்புத்துறை அமைச்சர் அலில்யுனேசி அரச தொலைக்காட்சிக்குத் தெரிவித்தார்.

இவரது இந்த விபரத்தை வெளியிட்ட ஈரானிய அரச தொலைக்காட்சி அல்கொய்டா அமைப்பினருக்கெதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் இந்த நடவடிக்கையின் போது தடுத்து வைக்கப்பட்டவர்களின் விபரம் போன்றவற்றை வெளியிடவில்லை.

அல்கொய்டா அமைப்பின் உறுப்பினர்களில் 12 பேரைத் தாம் பிடித்துவைத்திருப்பதாகவும், இவர்களைத் தாம் விசாரிக்கவுள்ளதாகவும் - ஈரான் வெளியுறவு அமைச்சர் கமல் ஹர்சாய், கடந்த ஜனவரி மாதம் தெரிவித்திருந்தார். ஆனால் இவர்கள் எப்போது விசாரணை செய்யப்படுவார்கள் என்ற விபரத்தை அவர் வெளியிடவில்லை.

ஈரானில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்கொய்டா சந்தேக நபர்களில் - அல்கொய்டா அமைப்பின் பேச்சாளர் சுலைமான் அபு ஹயித் மற்றும் பின்லேடனின் மகன் சாட் பின்லேடன் ஆகியோர் அடங்கியிருப்பதாகச் சவுதியிலிருந்து வெளிவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, அமெரிக்காவில் 2001 ஆம் ஆண்டு செப்ரம்பர் 11 இல் நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பயிற்சி வழங்கிய அல்கொய்டா அமைப்பின் மூன்றாவது தலைவரான சயீப் அல் - அடெல் என்பவரும் ஈரானில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களில் அடங்கலாமெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



அமெரிக்கா தலைமையிலான படைகள் ஆப்கானில் - தலிபான்கள் மீது தாக்குதலை நடத்தியவேளை, அங்கிருந்து தப்பி ஓடிய அல்கொய்டா போராளிகளுக்கு ஈரான் தஞ்சமளித்துள்ளதாக வெளிவந்த குற்றச்சாட்டை அந்தநாடு மறுத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# முல்லைத்தீவு பெருந்தள வெற்றி; 8 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வுகள்!

## நேற்று சிறப்புற நடைபெற்றது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இராணுவ - கடல் பெருந்தளம் தமிழீழ விடுதலைப் புலிகளால் வெற்றிகொள்ளப்பட்ட 8 ஆம் ஆண்டு நிறைவு விழா நேற்றுப் பேரெழுச்சியுடன் நடைபெற்றது.

1996 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளால் 'ஓயாத அலைகள்-1' நடவடிக்கை மூலம் இந்தப் பெரும்தளம் வெற்றிகொள்ளப்பட்டது.

நேற்றைய நிகழ்வின் ஆரம்பத்தில் முல்லை நகர்ப் பகுதியில் அமைந்துள்ள பெருந்திணைக்களச் சந்தியில் இருந்து ஆரம்பமான தமிழர் பாரம்பரியத்தை சித்திரிக்கும் அமசங்களுடன் நகர்ந்த பேரணி முல்லைத்தீவு பொது மைதானத்தைச் சென்றடைந்தது.

பொது மைதானத்தில் ஆரம்பமான நிகழ்வில் - பொதுச்சுடரினை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஏற்றினார். தமிழீழ தேசியக்கொடியினை கடற்புலிகளின் தளபதிகளின் ஒருவரான மங்களேஸ் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து ஓயாத அலைகள் வெற்றிச்சமரில் வீரச்சாவடைந்த கரும்புலி மாவீரர் திருவுருவப்படத்திற்கு தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர் த.கனகரத்தினம், முல்லை மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் முகுந்தன், புலிகளின் குரல் நிர்வாகப் பொறுப்பாளர் ந.தமிழன்பன், அரசியற்துறை நடுவப்பணியகத்தைச் சேர்ந்த அம்பி ஆகியோர் சுடரினை ஏற்றி மலர்மாலைகளை அணிவித்தனர்.

பின்பு அரங்கு நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்த நிகழ்வுகளில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

## இளையோர் உதைபந்தாட்டம்

## யாழ்.மாவட்ட அணிகளுக்கு இரண்டு வெற்றிக் கேடயங்கள்

தமிழீழ விளையாட்டுத் துறையினரால் மேஜர் முரளி நினைவாக நடத்தப்பட்ட இரண்டாவது தமிழீழ தேசிய இளையோர் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிநாள் நிகழ்வுகள் நேற்றுக் காலை 9 மணிக்கு தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகியது

தமிழீழ விளையாட்டுத்துறைச் செயலாளர் அன்ரன் அன்பழகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சுவிஸ் உதைபந்தாட்ட அணியின் முகாமையாளர் மதி தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். ஈகச்சுடரினை திருமலை மாவட்ட விளையாட்டு அலுவலர் ஜோன் பிள்ளை, அம்பாறை அணியின் பயிலுநர் ஜனாப் பைசர் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

பிற்கல் 2.30 மணியளவில் யாழ் - திருமலை அணிகளுக்கிடையிலான 19 வயதுக்குட்பட்டோருக்கான இறுதிப்போட்டி இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் யாழ். அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று 19 வயதுக்குட்பட்டோருக்கான மேஜர் முரளி நினைவு வெற்றிக்கேடயத்தை சுவீகரித்துக்கொண்டது.

யாழ். அணியின் சார்பில் டி.கமிலஸ், ரி.றொசாந்தன் ஆகியோரும் திருமலை அணியின் சார்பில் ராஜீஸ்டீவும் கோல் போட்டனர்.

தொடர்ந்து 17 வயதுக்குட்பட்டோருக்கான இறுதிப் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் அம்பாறை அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மேஜர் முரளி நினைவுக் கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற 14 வயதுக்குட்பட்டோருக்கான இறுதிப் போட்டியில் யாழ்.அணி வீரர் பி.ஜெரோன் சுவிஸ் அணிக்கெதிராக கோல் ஒன்றைப் போட்டு 1.0 என்ற கோல் கணக்கில் மேஜர் முரளி நினைவுக் கேடயத்தை தமது அணி பெற வழிசமைத்தார்.

தொடர்ந்து முல்லை - யாழ் மகளிர் அணிகளுக்கு இடையிலான போட்டி இடம்பெற்றது. இந்தப் போட்டியில் முல்லை அணி வெற்றி பெறறு மேஜர் முரளி நினைவுக் கேடயத்தை சுவீகரித்தது.

இளமகள் இரு கோல்களையும், சுடரினி ஒரு கோலையும் போட்டனர்.

தொடர்ந்து பரிசளிப்பு வைபவம் நடைபெற்றது. தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் சீ.நளன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ் [illegible] நன்றியுரை நிகழ்த்தினார்.

தமிழீழக் காவல்துறை துணைப் பொறுப்பாளர் மாதவன், அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், யாழ்.விளையாட்டு அலுவலர் றொகான், இராஜசிங்கம், மட்டு-அம்பாறை துணைத் தளபதி பிர[illegible] கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அலுவலர் சு.கனகராசா, தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா, டென்மார்க் விவசாய பல்கலைக்கழக விரிவுரையாளர் டாக்டர் சிறிதேவி ஸ்கந்தராஜா, டாக்டர் காந்திமதி கணபதிப்பிள்ளை (அவுஸ்ரேலியா), தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன், தமிழீழ விளையாட்டுத் துறைத் தலைவர் த.பத்மநாதன், சுவிஸ் நாட்டின் தாயக அமைப்பின் அமைப்பாளர் த.மதி, சுவிஸ் இளைஞர் அணி பயிற்றுனர் செல்வா, கிளிசொச்சி மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் ராஜா, கிளிநொச்சி மகளிர் மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் கௌரி ஆகியோர் வெற்றிபெற்ற வீராங்கனைகளுக்கான பரிசில்களையும், பதக்கங்களையும் , கேடயங்களையும் வழங்கிக் கௌரவித்தனர்.

தொடர்ந்து, சுவிஸ் அணியினர் முல்லை மாவட்ட உதைபந்தாட்ட அணியினருக்குத் தமது அன்பின் அடையாளமாக நிதியுதவியினையும் விளையாட்டு உபகரணங்களையும் வழங்கினர்.

நிறைவாகத் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இந்தப் போட்டித்தொடரில் கலந்துகொண்ட அணிகளைச் சந்தித்து அவர்களை வாழ்த்தினார்.

இரண்டாவது இளையோர் உதைபந்தாட்டத் தொடரில் சிறந்த வீரர்களாக 14 வயதுப் பிரிவில் ஜெரோன் (யாழ்.அணி), 17 வயதுப் பிரிவில் வினோத் (யாழ்.அணி), 19 வயதுப் பிரிவில் கமிலஸ் (யாழ்.அணி), மகளிர் அணியில் இளமகள் (முல்லை அணி) தெரிவு செய்யப்பட்டனர்.

சிறந்த கோல்க் காப்பாளர்கள்- 14 வயதுப் பிரிவு கை.சுதர்சன் (சுவிஸ்), 17 வயதுப் பிரிவு ரஹீம் (அம்பாறை), 19 வயதுப் பிரிவு தினேஷ் (திருமலை) மகளிர் பிரிவு சுகன்யா (யாழ்) ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

### அரசாங்க....

முயற்சிகள் தொடர்பாக அரசாங்கக் [illegible]

## வவுனியா கல்வியியல் கல்லூரி

## மயங்கிய நிலையில் மாணவன்; சிங்கள மாணவர் பகிஷ்கரிப்பு!

(வவுனியா)

வவுனியா கல்வியியற் கல்லூரியில் கல்வி பயிலும் சிங்கள மாணவர் ஒருவர் கைகள், கால்கள் மற்றும் கண்கள் கட்டப்பட்டு மயங்கிய நிலையில் மீட்கப்பட்டதையடுத்து விடுதிகளில் தங்கியுள்ள ஏனைய சிங்கள மாணவர்கள் தமது உணவு வகைகளை எடுக்காததுடன் நேற்றையதினம் பாடசாலைகளுக்கான தமது செயன்முறை விளக்கங்களுக்கு செல்லவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்றுமுன்தினம் சிங்கள மாணவன் ஒருவன் கல்வியியற் கல்லூரியின் தண்ணீர்த்தாங்கியடியில் கண்கள், கைகள், கால்கள் கட்டப்பட்ட நிலையில் கிடந்தார். மயங்கிக் கிடந்த இவரை நேற்றுக்காலை சக மாணவர்கள் மீட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

தமிழ் மாணவர்களின் செயற்பாடு காரணமாகவே இந்த சிங்கள மாணவன் கண்கள் கட்டப்பட்ட நிலையில் மயங்கிக் கிடந்ததாக தெரிவித்து சிங்கள மாணவர்கள் தமது செய்முறை விளக்கங்களை பகிஷ்கரித்தனர். அத்துடன் இந்தச் சம்பவம் தொடர்பாக தமக்கு நீதி வேண்டுமெனவும் கோரினர்.

ஆனால் இந்தச் சம்பவம் தொடர்பாக தமக்கு எதுவும் தெரியாது எனவும் இது சிங்கள மாணவர்களில் யாராவது ஒருவர் செய்துவிட்டு எம்மீது பழியை போட முயன்றுள்ளதாகவும் தமிழ் மாணவர்கள் தெரிவித்தனர். (03)

## தொண்டமான் - ஹக்கீம் - சந்திரசேகரன்

## அரசுக்கு ஆதரவளிப்பதில் எவ்வித தடையுமில்லை!

## ஐக்கிய தேசியக் கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

தமது கட்சியுடன் கூட்டணி உடன்பாடு செய்துகொண்ட போதிலும் ஆறுமுகம் தொண்டமான் ரவூப் ஹக்கீம் மற்றும் பி.சந்திரசேகரன் ஆகியோர் அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதில் எவ்வித தடையுமில்லை என ஐக்கிய தேசிய கட்சியின் பதில் செயலாளர் மில்ரோய் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

எனினும் ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றின் போது இந்த மூன்று [illegible] இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவு வழங்கப்போவதாக வெளியான தகவல்கள் தொடர்பாகவே தமது நிலைப்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சியின் பதில் செயலர் வெளியிட்டுள்ளார்.

### டக்ளஸ்....

புலனாய்வு அறிக்கையில் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை - கருணா, டக்ளஸ் தேவானந்தா மற்றும் கருணாவின் ஆயுதக்குழு உறுப்பினர்களை [illegible]

## புலிகளுடன் பேச்சு நடத்த ஹெல உறுமய ஆராய்வு!

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை மேற்கொள்வது குறித்து ஜாதிக ஹெல உறுமய ஆராய்ந்து வருவதாக கட்சி வட்டாரங்களை மேற்கோள்காட்டும் செய்திகள் தெரிவித்தன.

சமாதானப் பேச்சுக்களை எந்த வகையில் தொடரமுடியும் என்ற விடயம் தொடர்பாகவே இந்தச் சந்திப்பு அமையுமென ஹெல உறுமய கூறியுள்ளது.

பெரும்பான்மை சிங்கள மக்களின் கருத்துக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சரியான முறையில் எடுத்துக்கூறப்படவில்லை. தென்னாபிரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளைப் போலவே இலங்கையில் சமாதான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

சமாதானப் பேச்சானது அனைத்து தமிழ்த் தரப்புக்களையும் தெற்கில் அனைத்து எதிர்க்கட்சிகளையும் இணைத்ததாக அமையவேண்டும் எனவும் ஹெலஉறுமய கூறியுள்ளது.

### அங்கீகாரத்தை....

தலைப் புலிகள் மக்கள் முன்னணி, மக்கள் ஐக்கிய முன்னணி, பேரியல் அஷ்ரப்பின் தேசிய ஐக்கிய முன்னணி என்பனவும் அடங்குகின்றன.

இந்தக் கட்சிகள் பெரும்பாலும் ஏதோ ஒரு கட்சியுடன் சேர்ந்தே கடந்த தேர்தல்களில் போட்டியிட்டன. எனவே தேர்தல் காலங்களில் வாக்காளர்களுக்கு பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுகின்றன.

வாக்காளர் சீட்டு அச்சிடலில் தேர்தல் திணைக்களம் பாரிய செலவை மேற்கொள்ள வேண்டியுள்ளது போன்ற [illegible]

நடைபெற்றது. தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் சீ.நளன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா, தமிழீழ மகளிர் அரசியற்துறை பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் உரையாற்றினர்.

தமிழீழ விளையாட்டுத்துறை செயலாளர் அன்ரன் அன்பழகன்

## அரசாங்க....

முயற்சிகள் தொடர்பாக அரசாங்கக் கட்சிகளின் பிரதிநிதிகளை இணைத்து ஆலோசனை சபை ஒன்றை நிறுவப் போவதாக ஜனாதிபதி அறிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

இது மறுபுறத்தில் தேசிய அரசாங்கத்திற்கு ஈடான செயற்திட்டம் என்று கருதப்படுகிறது.

எனினும் ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றின் போது இந்த மூன்று தலைவர்களும் அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதில் இருந்து விலகிக் கொள்ளவேண்டும் என்பது தமக்கிடையிலான ஒப்பந்தத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கத்திற்கு ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான

இதேவேளை - கருணா, டக்ளஸ் தேவானந்தா மற்றும் கருணாவின் ஆயுதக்குழு உறுப்பினர்களை இலக்குவைத்து - கொழும்பு, மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிகளுக்கு தலா 10 பேரைக் கொண்ட நான்கு தற்கொலைத் தாக்குதல் குழுக்களை அனுப்பிவைத்திருப்பதாகவும் இந்தப் புலனாய்வு அறிக்கையில் எச்சரிக்கப்பட்டிருக்கிறது. (01)

யங்கள் ஏற்படுகின்றன.

வாக்காளர் சீட்டு அச்சிடலில் தேர்தல் திணைக்களம் பாரிய செலவை மேற்கொள்ள வேண்டியுள்ளது போன்ற காரணங்களை அடுத்தே, இவற்றை ரத்துச் செய்யத் தேர்தல் திணைக்களம் ஆலோசனை நடத்திவருகிறது. இலங்கையில் தற்போது 53 அரசியற்கட்சிகள் தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)


